10 MAR 2000


# வலம்புரி

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 மாசி 27 வெள்ளிக்கிழமை (10 - 03 - 2000) VALAMPURI ஒலி: 82


## இனப்பிரச்சினைக்கான சமாதானத் தீர்வில்

# ஜனாதிபதி சந்திரிகா - ரணில் சந்திப்பு

# புதிய திருப்பத்தை ஏற்படுத்தக் கூடும்!

## அரசியல் ஆய்வாளர் நம்பிக்கை

(கொழும்பு விசேட நிருபர்)

நீண்டகாலமாக இலங்கையில் நிலவி வரும் இனப்பூசலை ஒரு முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்கா குமாரதுங்காவுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்காவுக்கும் இடையில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பேச்சு வார்த்தை நேற்று ஆரம்பமாகின,

நாட்டினை அழிவுப்பாதைக்கு இட்டுச் செல்லும் யுத்தத்தை முற்றாக முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் இரண்டு பெரும் பான்மைக் கட்சிகளும் தம்மிடையே நிரந்தரமான ஒரு இணக்கப்பாட்டுக்கு வரும் வகையில் இந்தப் பேச்சுவார்த்தை இரண்டு மணித்தியாலம் வரை நீடித்தது.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசும் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சியும் இணைந்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முன்வந்தமை இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஓர் புதிய அத்தியாயத்தை ஏற்படுத்தியுள்ளது.

நேற்றுக்காலை 10 மணிக்கு அலரீமாளிகையில் ஆரம்பமான 1ம் கட்டப் பேச்சு வார்த்தை நண்பகல் 12மணி வரை நீடித்தது.

இம்மாத முடிவில் ஆரம்பிக்கப்படவிருக்கும் 2ஆம் கட்டப் பேச்சுவார்த்தையை ஓர் கால அட்டவணையின் அடிப்படையில் நடாத்துவதென்றும் அதற்கிடையில்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானத்திற்கான வித்து இடப்பட்டுள்ளது

### அமரபுர மகாசங்கம் கருத்து

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் எதிர்க்கட்சிக்குமிடையில் நேற்று நடைபெற்ற பேச்சு வார்த்தை குறித்து பலரும் பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

ஸ்ரீலங்கா அமரபுர மகா சங்கம் கருத்துத் தெரிவிக்கையில் பேச்சு வார்த்தையில் சமாதானத்திற்கான திட்டமொன்றை உருவாக்க இணங்கியிருப்பதை வரவேற்

(8ஆம் பக்கம் பார்க்க)

## அநாவசியமற்ற யுத்தம் நிறுத்தப்படின் பொருளாதாரம் விருத்தி அடையும்

### எம். எச். எம். அஸ்ரப்

இனப்பிரச்சினைத் தீர்வில் ஒத்துழைப்பு வழங்குவதற்கு எதிர்க்கட்சி முன்வந்திருப்பது குறித்துத் தாம் திருப்தியடைந்திருப்பதாக கப்பல் போக்குவரத்து துறைமுக அபிவிருத்தி அமைச்சர் எம். எச். எம். அஸ்ரப் தெரிவித்துள்ளார்.

[8ஆம் பக்கம் பார்க்க]

## இளைஞனைக் காணவில்லை

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி இந்துக்கல்லூரி க. பொ. த. சாதாரண தர வகுப்பு மாணவன் இராசரெட்ணம் தற்பரன் நேற்று முன்தினம் முதல் காணாமல் போய் விட்டதாக மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ் அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவர் சம்பவதினம் வீட்டிலிருந்து விளையாடுவதற்காக சென்றதாகவும் இன்னும் வீடு திரும்பவில்லை எனவும் பெற்றோர்கள் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (வ-ச)

## வெல்லாவெளிப் பகுதியில் அதிரடிப்படை புலிகள் மோதல்!

(ஏறாவூர்)

மட்டக்களப்பு வெல்லாவெளிப்பகுதியில் உள்ள இராணுவக் கட்டுப்பாடற்றபகுதியில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் நேற்று நண்பகல் மறைந்திருந்து மேற்கொண்ட தாக்குதலில் 4 புலிகள் உயிரிழந்ததாக பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

[8 ஆம்பக்கம் பார்க்க]

## வத்திராயன் பகுதியில் புலிகள் இராணுவம் மோதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வத்திராயனில் இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில்நடைபெற்ற மோதலில் ஏழு விடுதலைப்புலிஉறுப்பினர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் மேலும் பலர் காயமடைந்துள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமைச் செயலகம் தெரிவித்துள்ளது,

இம்மோதலின் போது இராணுவத்தரப்பில் இரண்டு பேர் கொல்லப்பட்டுள்ளதாகவும் மூன்று பேர் காயமடைந்துள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [வ-த]

## கைது செய்யப்பட்ட தாயும், மகளும் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

கடந்த முதலாம் திகதி கைது செய்யப்பட்டு 7 ஆம் திகதி கொழும்பு குற்றப்புலனாய்வுப்பிரிவுக்குக் கொண்டு செல்லப்பட்ட தாயும் மகளும் நேற்றுப் பகல் 11 மணியளவில் விடுவிக்கப்பட்டனர்.

இவர்களைப் பொலிஸார் வீட்டில் கொண்டு வந்து விட்டுள்ளனர். கார்த்திகேசு இராசம்மா (வயது 7[illegible]) கார்த்திகேசு சசிகலா (வயது

(8ஆம் பக்கம் பார்க்க)

### மாணவன் அர்ஜுனை

## விடுதலை செய்யக் கோரி திருமலையில் பகிஷ்கரிப்பு

(திருகோணமலை)

திருமலை நகரப் பாடசாலை மாணவ மாணவிகள் நேற்றுத் தமது வகுப்புக்களைப் பகிஷ்கரித்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த வியாழக்கிழமை திருகோணமலை உள்துறைமுக வீதியில் இடம் பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல் சம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி மாணவ

(8ஆம் பக்கம் பார்க்க)

### பொலிஸார்சம்பளப்பணம்கொள்ளை

## சப்இன்ஸ்பெக்டர் மீது வழக்குத் தாக்கல்!

பாராளுமன்றப் பொலிஸாருக்கு வழங்கப்படவிருந்த சம்பளப்பணம் கொள்ளையிடப்பட்டது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட சப் இன்ஸ்பெக்டர் மீது நேற்று கொழும்பு நீதி மன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இக்கொள்ளை தொடர்பாக சப் இன்ஸ்பெக்டர் நந்தன இலந்த குமார கைது செய்யப்பட்டிருந்தமையும், திருட்டுப்போனபணம் சுமார் ஐந்து லட்சம் மீட்கப்பட்டதும் தெரிந்ததே. [வ]

### ✶ திருக்கேதீஸ்வர ஆலய விவகாரம்

## ஜனாதிபதி அளித்த வாக்குறுதிப்படி

# ராணுவம் முற்றாக விலக வில்லை!

### ஆலய புனருத்தாரண சபைத் தலைவர்

(மன்னார்)

திருக்கேதீஸ்வரம் ஆலயப் பகுதியில் இருந்து இராணுவம் ஒருவார காலத்துக்குள் முற்றாக வெளியேறி விடும் என ஜனாதிபதி அறிவித்திருந்தும் இதுவரை இராணுவம் முற்றாக வெளியேறவில்லை என மன்னார் செய்திகள் தெரிவிக்கின்றன.

சிவராத்திரி தினத்தன்று சம்மந்தர்மடம், தேர்முட்டி, தெற்கு வீதியிலுள்ள சிவராத்திரி மடம் ஆகியவற்றி

(8ஆம் பக்கம் பார்க்க)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# நவாலி முருகானந்தா சனசமூக நிலைய போட்டி முடிவுகள் வெளியாகின

(மானிப்பாய்)

நவாலி முருகானந்தா சனசமூக நிலையத்தின் பொன் விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட சமய பொது அறிவுப் போட்டி முடிவுகளின் விபரம் பின்வருமாறு

### பொது அறிவு

**மத்திய பிரிவு**

1ம் இடம் அ. கே. சிவறமணன், 2ம் இடம் சி. சுஜிந்தினி, 3ம் இடம் சி. சுரேஸ்.

**மேற்பிரிவு**

1ம் இடம் ம. கஜேந்திரன் 2ம் இடம் த. செந்தூரன், ர. மோகன்ராஜ்.

**அதிமேற்பிரிவு**

1ம் இடம் பொ. சிவசாந்தி 2ம் இடம் சி. சிவரூபன், 3ம் இடம் எஸ். சயந்தி.

### சமய அறிவு

**கீழ்ப் பிரிவு**

1ம் இடம். ந. கபில்ராஜ், 2ம் இடம் சி. சிவதர்சினி, 3ம் இடம் யோ. சிவனேஸ்வரி.

**மத்திய பிரிவு**

1ம் இடம் ச. தயன், 2ம் இடம் ஈ. கயல்விழி, 3ம் இடம் பி. சுஜிந்தினி.

**மேற் பிரிவு**

1ம் இடம் ம. கஜேந்திரன் 2ம் இடம் ஈ. அஜந்தா, 3ம் இடம் யோ. திலகேஸ்வரி.

**அதிமேற் பிரிவு**

1ம் இடம் பொ. சிவசாந்தி 2ம் இடம் க. கலாஜினி, 3ம் இடம் சி. சிவரூபன்.

இவர்களுக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் சிவராத்திரி தினத்தை யொட்டி இடம் பெற்ற கலை நிகழ்வில் வழக்கப்பட்டது.

# கோட்ட பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டப் போட்டி முடிவுகள்

(அச்சுவேலி)

கோப்பாய்க் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக் கிடையில் நடைபெற்ற கரப்பந்தாட்டப் போட்டியின் முடிவுகள் வருமாறு:-

17 வயதுப் பிரிவு

★ 1 ஆம் இடம், யாழ். ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம் ம. வி.

★ 2 ஆம் இடம், யாழ். கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.

★ 3 ஆம் இடம், யாழ். அச்சுவேலி மகாவித்தியாலயம்.

19 வயதுப் பிரிவு

★ 1 ஆம் இடம், யாழ். கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.

★ 2 ஆம் இடம், யாழ். சோமஸ்கந்தாக் கல்லூரி.

★ 3 ஆம் இடம் யாழ். ஆவரங்கால் மகாஜனா வித்தியாலயம்.

17 வயதுப் பிரிவு இறுதிப் போட்டியில், யாழ். ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம் வித்தியாலயம் 3: 0 என்ற புள்ளிகளைப் பெற்று, யாழ். கோப்பாய்க் கிறிஸ்தவக் கல்லூரியை வெற்றி பெற்றது.

19 வயதுப் பிரிவு இறுதிப் போட்டியில் யாழ். கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி 3; 2 என்ற புள்ளிகளைப் பெற்று, யாழ். சோமஸ்கந்தா கல்லூரியை வெற்றி பெற்றது. (செ-57)

# வலி. வலய பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டப் போட்டிகள்

(இளவாலை)

வலிகாம கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள வலைப்பந்தாட்டப் போட்டியில் பங்கு புற்றவுள்ள அணிகள் பின்வருமாறு.

**15 வயதுப் பிரிவு**

★ யாழ். கந்தரோடை தமிழ்க் கந்தையா வித். எதிர் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

★ யாழ். குளமங்கால் றோ. க. எதிர் யாழ். இளவாலை கன்னியர் மட ம. வி.

★ யாழ். மானிப்பாய் மகளிர் எதிர் யாழ். விக்ரோறியாக் கல்லூரி.

**17 வயதுப் பிரிவு**

★ யாழ். வட்டு. இந்துக் கல்லூரி எதிர் யாழ். யூனியன் கல்லூரி.

★ யாழ். உடுவில் மகளிர் கல்லூரி எதிர் யாழ். மானிப்பாய் மகளிர்.

★ யாழ். குளமங்கால் றோ. க. எதிர் யாழ். இளவாலை கன்னியர் மடம் ம. வி.

**19 வயதுப் பிரிவு**

★ யாழ். உடுவில் மகளிர் எதிர் யாழ். மகாஜனாக் கல்லூரி. யாழ். பண்ணாகம் மகளிர் எதிர் யாழ். வட்டு. கல்லூரி.

இவ் வலைப்பந்தாட்டப் போட்டிகள் யாவும் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் பி.ப. 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (செ-12)

## துடுப்பாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளுக்கிடையிலான 19 வ.யதிற்குட்பட்டோருக்கான துடுப்பாட்டப் போட்டிகளில் இன்றும் நாளையும், யாழ். கொக்குவில் இந்துக்கல்லூரி, யாழ். இந்துக்கல்லூரியை எதிர்த்து ஆடவுள்ளது.

இன்று பி. ப. 2. 30- 5. 30 வரையும் நாளை மு. ப. 9. 00- பி. ப. 5. 30 வரையும் மேற்படி இருகல்லூரிகளும் ஆடவுள்ளன.

இத்துடுப்பாட்டங்கள் யாவும் யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது. (செ)

## தூபி அமைக்கக் கோரிக்கை

(நெடுந்திதீவு)

தனிநாயகம் அடிகளுக்கு நினைவு முத்திரை வெளியிடுமாறு நெடுந்தீவு பிரதேச சபை, தபால் திணைக்களத்திடமும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஈ. பி. டி. பி கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா ஆகியோரிடம் கோரிக்கை விடுக்கவுள்ளது.

மேற்படி பிரேரணைக்கான முன்னறிவித்தல் பிரதேசசபை உறுப்பினர் சி. சண்முகநாதனால் பிரதேசசபைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

## மகளிர் தின நிகழ்வு

பலாலி ஆசிரியகலாசாலை மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட மகளிர் தின நிகழ்வு நேற்று முன்தினம், மாணவர் மன்றத்தலைவர் எம்.பிரசாந்தன் தலைமையில் இடம்பெற்றது.

கலாசாலை அதிபர் கே.சதாசிவமூர்த்தி, விரிவுரையாளர் கோதை நகுலராசா மற்றும் ஆசிரியர் பலர் இந் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கினர்.

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

[அச்சுவேலி]

யா/கோப்பாய் நாவலர் வித்தியாலயவருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி, இன்று வெள்ளிக்கிழமை பி. ப 2.00 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி நவரட்ணராஜா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

அதிபர்கே. வி. குணசேகரம் தலைமையில் நடைபெறும் இப்போட்டிக்குக்கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். [செ-57]

★ ★ ★

[யாழ்ப்பாணம்]

யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை பி.ப.1.00 மணிக்கு பாடசாலைமைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் திருமதி பொன்னம்பலம் தலைமையில் நடைபெறும் இப் போட்டிக்கு, கப்டன் சோமசுந்தரம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார். (செ)

## வலிகாமம் கல்வி வலய

# பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டப் போட்டிகள்

(இளவாலை)

வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள கரப்பந்தாட்டப் போட்டியில் பங்குபற்றவுள்ள அணிகள் பின்வருமாறு:

17 வயதுப் பிரிவு

★ யாழ். மல்லாகம் ம.வி. எதிர் யாழ். மானிப்பாய் மெமோறியல்.

★ யாழ். யூனியன் கல்லூரி எதிர் யாழ். விக்ரோறியாக் கல்லூரி.

★ யாழ். வட்டு. மத்திய கல்லூரி எதிர் யாழ். மானிப்பாய் இந்துக் கல்லூரி.

★ யாழ். சங்கானை சிவப்பிரகாசம் எதிர் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம்.

19 வயதுப் பிரிவு

★ யாழ். மல்லாகம் ம.வி. எதிர் யாழ். மானிப்பாய் இந்துக் கல்லூரி.

★ யாழ். வட்டு. மத்திய கல்லூரி எதிர் யாழ். யூனியன் கல்லூரி.

★ யாழ். சங்கானை சிவப்பிரகாசம் எதிர் யாழ். சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி.

★ யாழ். புனித கென்றியரசர் கல்லூரி எதிர் யாழ். விக்ரோறியாக் கல்லூரி.

இக் கரப்பந்தாட்டப் போட்டிகள் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் பி. ப. 1. 30 மணிக்கு நடைபெறவுள்ளது. (செ-12)

## துடுப்பாட்டப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டப்பாடசாலைகளுக்கிடையிலான 19 வயதிற்குட்பட்டோருக்கான துடுப்பாட்டப் போட்டிகளில் இன்றும் நாளையும். யாழ். மத்திய கல்லூரியை எதிர்த்து. சென். பற்றிக்ஸ் கல்லூரி மோதவுள்ளது.

இத்துடுபாட்டங்கள் யாவும் சென். பற்றிக்ஸ் மைதானத்தில் இடம் பெறவுள்ளது. (செ)

# பயண அனுமதி வழங்கப்பட்டோர்

யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களுக்கு இம்மாதம் 09 ஆம் திகதிவரை பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாகத் தரப்படுகின்றது.

**சங்கானை**

129003 ஏ — 129278 ஏ
129285 ஏ — 129285 பி
135607 ஏ — 135610 ஏ
135715 ஏ — 135943 ஏ
138097 ஏ — 138097 பி

**கோப்பாய்**

136281 ஏ — 136453 ஏ
136711 ஏ — 136711 பி

**நல்லூர்**

121767 ஏ — 121767 பி
135954 ஏ

**சண்டிலிப்பாய்**

135819 ஏ — 135819 பி
135819 சி — 135819 டி
135973 ஏ — 135973 பி
138150 ஏ — 138385 ஏ
138385 பி

**தெல்லிப்பழை**

138268 ஏ

**உடுவில்**

133890 எ — 136344 ஏ
136344 பி — 136344 சி
136344 டி — 136344 ஈ
135652 ஏ — 135776 ஏ
135832 ஏ — 135878 ஏ
135878 பி — 135926 ஏ
135926 பி — 135926 சி
138102 ஏ — 138102 பி
138115 ஏ

## வீதி திருத்தம்

(புலோலி)

காரைநகர் சரித்திரப் பிரசித்தி பெற்ற ஈழத்துச் சிதம்பரத்துக்குச் செல்லும் வீதி, சுமார் 10 வருடங்களின் பின் திருத்தப்பட்டு வருகிறது.

வலிமேற்கு பிரதேச சபைத் தலைவர் என் திரிலோகநாதன் மேற்கொண்ட முயற்சிகளின் பயனாய், இவ்வீதி அமைப்புக்கான நடவடிக்கைக்கு யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான டக்ளஸ் தேவானந்தா அனுமதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-52)

## (இராசி பலன்)

10.03.2000

வெள்ளிக்கிழமை

(தமிழுக்கு மாசி - 27)

சதுர்த்தி காலை 8.24 வரை, அச்சுவினி காலை 7.26 வரை, பின் ரோகினி, சித்தயோகம், இராகுகாலம் காலை 11.55 முதல் 12.54 வரை, சுபநேரம் காலை 6.52 முதல் 8.22 வரை,

**மேடம்:** வீட்டில் சுபகாரியம், மனமகிழ்ச்சி, அயலவர் பாராட்டு

**இடபம்:** முட்டிமோதல், வீண் செலவு, எதிரிகள் கவலை.

**மிதுனம்:** தியானநிலை, தொழில் போட்டி, சகோதர ஆறுதல்.

**கடகம்:** எதிர்பாராத உறவு, காரிய சித்தி, புதியசிந்தனை.

**சிங்கம்:** வாய்ப்புநழுவுதல், வேலைக் கஷ்டம், அமைதியின்மை.

**கன்னி:** பிறர்கண்டனம், மனம் நோதல், காரியதடை.

**துலாம்:** விவேகமானமுடிவு, புதியஸ்தானம், பண்பாடு.

**விருச்சிகம்:** கூடிப்பேசல், இல்லறசுகம், புத்திரர் பெருமை.

**தனுசு:** குடும்ப தொல்லை, பணக் கஸ்டம், அநாகரிக செயல்.

**மகரம்:** வழித்தொல்லை, பழைய நினைவுகள்: சபலபுத்தி.

**கும்பம்:** தொழில்முதலீடு, பெண் உதவி, கருத்தொற்றுமை.

**மீனம்:** மனக்குமுறல், தீராதபிரச்சனை, அலைச்சல்.

(இலங்கை நேரப்படி கணிக்கப்பட்டது.)

-அனுஷியா

# பஸ்-மோட்டார் சைக்கிள் விபத்து பொலிஸார் ஒருவர் படுகாயம்

(அச்சுவேலி)

வடபிராந்திய போக்குவரத்துச்சபை பேருந்து ஒன்றும் பொலிஸ் மோட்டார் சைக்கிளும் மோதிக் கொண்டதில் பொலிஸார் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் பலாலி இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அச்சுவேலி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த டி.சில்வா என்பவரே படுகாயமடைந்தவராவார்.

அச்சுவேலி அரசாங்க மருத்துவ மனைக்கு அண்மையில் உள்ள திருப்பத்திலேயே மேற்படி விபத்து இடம் பெற்றுள்ளது. (க-57)

## கஷ்டப் பிரதேசங்களில்

# கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு இடர்காலக் கொடுப்பனவு வழங்கப்படும்

## ஜனாதிபதி செயலகம் தெரிவிப்பு

[கொழும்பு]

கஷ்ட பிரதேசங்களில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு இடர்காலக் கொடுப்பனவுகள் மற்றும் பிரயாணப்படிகள் ஆகியன வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென ஜனாதிபதி தெரிவித்ததாக அவருடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அவை மேலும் தெரிவிக்கையில்; ஜனாதிபதிக்கும் கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரான பிரதிகல்வி அமைச்சர் மற்றும் உயர் அதிகாரிகளைக் கொண்ட உயர் மட்டக்குழுவினருக்கும் இடையில் ஜனாதிபதியின் வாசஸ் தலத்தில் சந்திப்பு ஒன்று அண்மையில் இடம் பெற்றது.

அச்சந்திப்பிலேயே மேற்கண்ட தகவல்கள் ஜனாதிபதியால் தெரிவிக்கப்பட்டன.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்படுவதாவது பிரதேச ரீதியாக பாடசாலைக் கட்டடங்கள் கட்டுவதற்காக 1,700 மில்லியன் ரூபாக்கள் செலவிடப் பட்டதாகவும் மேலும் பாடசாலைகள் தோறும் கற்பித்தல் உபகரணங்கள் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் வடக்கு கிழக்கில் 4ஆயிரம் ஆசிரியர் வெற்றிடங்கள் உள்ளதாகவும் 2,250 வெற்றிடங்கள் எதிர்வரும் யூன் மாதத்திற்குள் நிரப்பப் பட்டு விடும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. [க]

ஈ.பி.ஆர்.எல்.எவ்.இன்

# ஐரோப்பிய கிளையினர்பங்கு பற்றும் முக்கிய கூட்டம் இலண்டனில்

## பெருமளவினர் பங்கு பற்றினர்

[இலண்டன்]

ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் ஐரோப்பிய வட அமெரிக்க கிளைகளைப் பிரதி நிதித்து வப்படுத்தும் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் கூட்டமொன்று இலண்டனில்பெப்ரவரி 19,20 ஆம் திகதிகளில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் தற்போது ஈ.பி.ஆர்.எல்.எவ் இல்தோன்றியுள்ள நெருக்கடிகள் பற்றி ஆராய்ந்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

எதிர்காலத்தில் வெளிநாடுகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்றிட்டங்கள் பற்றியும் ஆராயப்பட்டது.

மேலும் தற்போதைய அரசியல் நிலை பற்றியும் ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் அரசியற் திட்டம் பற்றியும் விரிவான கலந்துரையாடலும் இடம் பெற்றதுடன் கட்சிக் காங்கிரசிற்கான அறிக்கை பற்றியும் விவாதிக்கப்பட்டது.

இக் கூட்டமுடிவில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு,

ஜனவரி 13 ஆம், 14 ஆம் திகதிகளில் கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் நடத்திய கூட்டத்தை கட்சிக் காங்கிரசாகக் காட்ட முயல்வதைக் கண்டிக்கிறோம்,

★குறிப்பாக வவுனியாக் கூட்ட முடிவில்தோழர்சுரேஷ் பிரேமச்சந்திரனால் வெளியிடப்பட்ட அறிக்கை கட்சியின் கொள்கைளுக்கு முரணானதும், கட்சியை சரணாகதிப் பாதைக்கு இட்டுச் சென்று நிர்மூலமாக்குவதற்கே வழி வகுக்கும் என்றும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

★இம் முயற்சியானது வெளி நாடுகளிலுள்ள கட்சியின் பெரும்பான்மை உறுப்பினர்கள், ஆதரவாளர்களையும் விசனத்துக்குள்ளாக்கியிருப்பதுடன் இதுகட்சியை ப்பிளவு படுத்த எடுக்கப்பட்ட முயற்சியாகவே கருதுகின்றோம்.

கட்சியைப் பிளவுபடுத்தும் இப் போக்கினை நிராகரித்து அனைத்து உறுப்பினர்கள், ஆதரவாளர்களையும் ஒன்றிணைந்து காங்கிரசை உடனடியாகக் கூட்டுமாறு அறை கூவல் விடுகின்றோம்.

தமிழ் பேசும் மக்களுக்கான ஜனநாயகச் சூழலை ஏற்படுத்துவதே முதன்மையானதும் முக்கியமானதுமான கட்சிக்கடமை என்பதை வலியுறுத்துகின்றோம். (க)

# கொழும்பில் கோஷ்டி மோதல் ஒருவர் பலி! இருவர் காயம்

[கொழும்பு]

கொழும்புகற்தானைப் பகுதியில் இடம்பெற்ற கோஷ்டி மோதலையடுத்து ஒருவர் கொல்லப்பட்டதுடன் இருவர் காயமடைந்துள்ளனர்.

இரு குழுவினருக்கும் இடையில் இடம்பெற்ற வாய்த்தர்க்கமே துப்பாக்கி மோதலாக உருவெடுத்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (க-9)

# வருடாந்த மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். அரியாலை, நீர்நொச்சித் தாழ்வு ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தான சிவபெருமான் வருடாந்த உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

மார்ச்19 ஆம்திகதி ஞாயிற்றுக் கிழமை இரதோற்சவமும், மார்ச் 20 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் இடம் பெறவுள்ளது.

(செ)

★ ★ ★

(அரியாலை)

நல்லூர் பாணன் குளம் நாச்சிமார் ஆலய வருடாந்த மகோற்சவம் கடந்த புதன் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரதோற்சமும், 22 ஆம் திகதி புதன்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது.

(செ)

★ ★ ★

[புலோலி]

வட்டுக்கோட்டை சங்கரத்தை வீரபத்திர சமேத பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை சனிக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து பத்து தினங்கள் திருவிழா நடைபெற்று மார்ச் 20 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த் திருவிழா, 21 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெவுள்ளது.

[செ-52]

★ ★ ★

[யாழ்ப்பாணம்]

நீராவியடி சிவகுருநாதர் வீதி அருள்மிகு தோப்பு மாணிக்கப் பிள்ளையார் கோவில் வருடாந்த அலங்கார உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா நடைபெற்று இம் மாதம் 18 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. [செ]

★ ★ ★

(அரியாலை)

நாயன்மார்கட்டு ஸ்ரீவெயிலுகந்த விநாயகர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் நாளைசனிக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா நடைபெற்று, மார்ச் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரதோற்சவமும், மார்ச் 20 ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தோற்சவமும் இடம் பெறவுள்ளது. (செ)

★ ★ ★

(அரியாலை)

அருள்மிகு நல்லூர் ஸ்ரீசட்டநாதர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை சனிக் கிழமைநண்பகல் 12மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து பத்துத்தினங்கள் திருவிழா நடைபெற்று மார்ச் 19ஆம் திகதி தேர்த் திருவிழாவும் ,மார்ச் 20ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

(செ)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் ஐயனார் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று வெள்ளிக் கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

10தினங்கள் திருவிழா நடைபெற்று,மார்ச் 19ஆம் திகதி இராதோற்சவமும். மார்ச்20 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது. [செ]

★ ★ ★

[மூளாய்]

மூளாய் வதிரம்புலோ ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி கோவில் மஹோற்சவம் நாளை சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பங்குனி உத்தரத்தன்று தீர்த்தத்திருவிழாவும் மறுநாள் பூங்காவனத்துடனும் நிறைவடையவுள்ளது.

தினமும் மாலை 5.30 மணிக்கு ''திருவிளையாடற் புராணம்'' 'பற்றிய தொடர் சொற்பொழிவை கதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்தசர்மா நிகழ்த்தவுள்ளார்.

★ ★ ★

[யாழ்ப்பாணம்]

பண்ணாகம் விசுவர்த்தனை அருள்மிகுஸ்ரீமுருகமூர்த்தி கோவில்வருடாந்த மஹோற்சவம் கொடியேற்றத்துடன் இன்று ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறவுள்ளது.

தினமும் மாலை நான்கு மணிக்கு'மகாபாரதம்'பற்றி தொடர் சொற்பொழிவினை வை.நித்தியானந்தசர்மா ஆற்றவுள்ளார்.

[க-03]

# சாவகச்சேரியில் உணவுச்சாலைகள்மீது சுகாதாரப் பகுதியினர் திடீர் வேட்டை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர்ப்பகுதிக் கடைகளில் பொது சுகாதாரப் பரிசோதகர் குழுவினர் [7/3] திடீர்ப் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

நகரில் உள்ள தேனீர், பலசரக்குக் கடைகளில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த பிஸ்கட், மிக்சர், பால்மா வகைகள் உட்பட பல பொருட்களின் தரநிர்ணயம், பாவனைக் காலம், என்பவை பரிசோதனைக்குட்படுத்தப் பட்டது. இச் செயற்பாட்டை பொதுச் சுகாதார பரிசோதகர் கிளிண்டஸ் திருக்குணம் உட்பட ஓர் குழுவினரால் மேற்கொள்ளப்பட்டது. இங்கு குறிப்படத்தக்கது.

[க-21]

# குடிநீர்ப்பிரச்சினை ஏற்பட்டநாடுகளில் இலங்கைக்கு நான்காம் இடம்

## - புள்ளி விபரங்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

குடிநீர்ப் பிரச்சினை எற்பட்டுள்ள நாடுகளில்இலங்கை நான்காம் இடத்தை வகிக்கிறது எனபுள்ளி விபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விவசாய கைத்தொழில் அபிவிருத்திகளுக்கு அதிகளவிலான நீர் தேவைப்படுவதால் பொருளாதாரத்துக்கு இன்றியமையாத பொருளாக நீர் மாறிவிட்ட நிலையில் தற்போது அதிகரித்து வரும் தேவைக்கேற்ப நீரை விநியோகிக்க முடியாத நிலை இலங்கையில் ஏற்பட்டுள்ளது.

தற்போது நிலத்துக்கடியில் உள்ள நீர்வளம் மிக வேகமாக குறைந்து வருகிறது.

நீரூற்றுக்கள் காலக்கிரமத்தில் வற்றிவிடும் அபாயமும் காணப்படுகிறது. இந்நிலை நீடிக்குமானால் இன்று இலங்கையில் அதிகரித்து வரும் சனத்தொகைக்குத் தேவைப்படும் குடிநீரைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையொன்று ஏற்படலாம் எனவும் அஞ்சப்படுகிறது.

யாழ். குடாநாட்டில்

# விளையாட்டு உத்தியோகத்தர் பதவிகள் நிரப்பப்படவில்லை

(தென்மராட்சி)

யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள பல பிரதேச செயலர் பிரிவுகளில் விளையாட்டு உத்தியோகத்தர் பதவிகள் நீண்டகாலமாக வெற்றிடமாக இருந்து வருகின்றன.

இதன்காரணமாக பிரதேச செயலர் பிரிவுகளில் விளையாட்டு அபிவிருத்தி தொடர்பான நடவடிக்கைகளோ அல்லது செயல்பாடுகளோ இடம்பெறுவது இல்லை எனத் தெரியவருகின்றது.

விளையாட்டு உத்தியோகத்தர்கள் பதவிகள் நிரப்பப்படாமையினால் பிரதேசசெயலர் பிரிவுகளிலுள்ள விளையாட்டுக் கழகங்கள் முறையான ஊக்குவிப்புகள் பெறாமல் இருப்பதுபற்றியும் அறியப்படுகின்றது. (க-77)

வீட்டுத் தலைவியானவள்

# ஒரு மெழுகுவர்த்தியைப் போல தன்னைத் தியாகம் செய்கிறாள்

(யாழ்ப்பாணம்)

வீட்டுத்தலைவியானவள் ஒரு மெழுகு வர்த்தியைப் போன்று தன்னைத் தியாகம் செய்கிறாள் எமது பெண்கள் அன்றாடப் பிரச்சினைகளுக்குள்ளே இருக்கின்றார்கள் இவ்வாறு நேற்று முன்தினம் நாவலர் கலாச்சார மண்டபத்தில் இடம்பெற்ற மகளிர் தின நிகழ்வில் கலந்து கொண்டு தலைமை உரையாற்றிய யாழ். மாநகர ஆணையாளர்வே.பொ.பாலசிங்கம் தெரிவித்தார்.

யாழ். மாநகரப்பகுதியின் சுகாதாரப் பிரிவினர் ஒழுங்கு செய்த மேற்படி விழாவில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் எமது குடும்பப் பெண்கள் எவ்வளவோ கஸ்ரங்களையும் துயரங்களையும் எதிர்கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். இருப்பினும் சாதாரணகுடும்பத்திலிருந்து பல்வேறு பிரச்சினைகளுக்கும் முகம்கொடுத்துத்தான் இந்நாட்டில் ஒரு பெண் பிரதமராகவும் தெரிவு செய்யப்பட்டார் எனவும் தெரிவித்தார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய ஐக்கிய நாடுகள் தொண்டர் நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி தெரிவிக்கையில் ; எமது அமைப்பு பெண்கள், குழந்தைகள் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை கொடுத்துள்ளது.

அதேவேளை கடந்த காலங்களில் இப்பகுதி குடும்பத் தலைவிகள் பல்வேறு கஸ்ரத்தின் மத்தியில் முன்னேறுவதைத்தன்னால்அவதானிக்க முடிவதாகவும் எமது கனடா தேசத்து குடும்ப அமைப்பிற்கும் இங்குள்ளவர்களின் குடும்ப அமைப்பிற்கும் வேறுபாடுகள் காணப்பட்டபோதிலும் இங்குள்ள குடும்பப் பெண்களின் மேம்பாட்டிற்கு கூடிய கவனம் செலுத்த வேண்டுமெனவும் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன. (க-3)

# விதவைகள் விபரம் சேகரிப்பு

[அரியாலை[

சமூகசேவைத்திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் விதவைகளின் விபரங்களைச் சேகரிக்கும் பணி அரியாலை வடமேற்கு J/91 கிராம அலுவலர் பிரிவில். எதிர்வரும் சனிக் கிழமை [11-03 2000] - காலை 9. 00 மணி தொடக்கம் அலுவலகத்தில் இடம் பெறும்என்று கிராமஅலுவலர் பி. தஜீதரன் தெரிவித்துள்ளார். [க-36]

# ஆலய வீதியில் பந்துவிளையாடிய சிறுவன் கிணற்றுள் விழுந்து பலி

ஆலய அருகாமையில் பந்து விளையாடிக் கொண்டிருந்த சிறுவன் ஒருவன் கிணற்றுள் விழுந்து நீரில்மூழ்கி மரணமானார்.

இமையாணன் மேற்கைச் சேர்ந்த செல்வன் எஸ். முகுந்தன் (வயது 11) என்பவரே பரிதாபகரமாக மரணமானவராவார். வல்வெட்டித்துறைப் பொலிஸார் சாட்சிகளை ஆஜர் செய்தனர். பருத்தித்துறை பதில் நீதவான் திரு. பீ. சுப்பிரமணியம் மரண விசாரணைகளை மேற்கொண்டனர்.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலை மாணவரான இவர் ஆலய வீதியில் பந்து விளையாடிக்கொண்டிருந்தபோது கிணற்றுக்குள் விழுந்த பந்தை எடுப்பதற்கு முயற்சித்தபோது கிணற்றுள் தவறி விழுந்தார். கிணற்றினுள் 12 அடி நீர் உண்டு இந்நீரில் மூழ்கி இறந்தார் எனச்சாட்சியம் அளிக்கப்பட்டது.

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி கே. மயிலேறும் பெருமாள் பிரேதப் பரிசோதனை செய்து நீரில் மூழ்கி ஏற்பட்ட மூச்சுத்திணறலால் மரணம் சம்பவித்துள்ளதாகச் சாட்சியமளித்தார். விபத்து, மரணமெனத்தீர்ப்பளிக்கப்பட்டது. (க-52)

### பிரிட்டனின் அகதி அந்தஸ்து

# கோரிய இலங்கைத் தமிழர் ஒருவர் விரைவில் நாடு கடத்தப்படலாம்!

[லண்டன்]

இலங்கைத் தமிழர் ஒருவருக்கு பிரித்தானியாவிலும் ஜேர்மனியிலும் அகதி அந்தஸ்து மறுக்கப்பட்ட நிலையில் மனித உரிமைக்கான ஐரோப்பிய பாராளுமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முப்பத்தொரு வயதான இந்நபர் பிரித்தானியாவில் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

ஜேர்மனியில் இருந்தபொழுது இவர் அகதி அந்தஸ்து கோரியதாகவும், அக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

இதேபோன்று பிரித்தானியாவிலும் இவரது அகதி அந்தஸ்து கோரிக்கை நிராகரிக்கப்பட்டதையடுத்து ஐரோப்பிய பாராளுமன்றில் இவர் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

தற்பொழுது பிரிட்டனில் தங்கியுள்ள இவர் ஜேர்மனிக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து இலங்கைக்கு நாடு கடத்தப்படலாம் என தெரிவிக்கப்படுகிறது.

(து)

## சந்தனமரக் கடத்தல்க்காரன் வீரப்பனின் சகாக்கள் மூவர் பொலிஸாரால் கைது

(புதுடில்லி)

சந்தனக்கடத்தல் வீரப்பனுடன் தொடர்புடைய, சகாக்கள் மூவரை தமிழ்நாடு காவல்துறையின் சிறப்புப் படையினர் கைது செய்துள்ளனர்.

இவர்களிடம் இருந்து ஒரு நாட்டுத்துப்பாக்கி, மற்றும் சிலஉணவுப்பொருட்களையும் கைப்பற்றி இருப்பதுடன், வீரப்பன் குழுவினருக்கு உணவு வழங்கி வந்தவர்களும் இனம் காணப்பட்டுள்ளனர்.

மேற்படி மூவரையும் 15 நாட்களுக்கு நீதிமன்றக் காவலில் வைக்கும்படி சத்தியமங்கலம் மஜிஸ்திரேட் உத்தரவிட்டுள்ளது. (க-9)

## நிருபர் கைது

(மொஸ்கோ)

ரஷ்யாவில் அமெரிக்க நிதி உதவியுடன் இயங்கி வரும் விபேட்டி றேடிறோ நிருபர், அன்றிடபின்ஸ்கி கைது செய்யப்பட்டுள்ளார் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

முன்பு, இவரைக் காணவில்லை எனவும், இறந்திருக்கலாம் எனவும் அச்சம் தெரிவிக்கப்பட்டிருந்தது. (க-9)

### திருமணமான அன்றிரவே

## கணவனின் துப்பாக்கி வேட்டிற்கு பலியான 14 வயது மணமகள்

### பாகிஸ்தானில் பரிதாப சம்பவம்

பல்வேறுகற்பனைகளுடன் திருமணப் பந்தத்தில் நுழைந்த 14 வயது மணப்பெண் ஒருத்தி அன்றிரவே கணவனாலும் ஏனையவர்களாலும் துப்பாக்கியால் சுடப்பட்டுப் படுகொலை செய்யப்பட்ட பரிதாப சம்பவம் அண்மையில் பாகிஸ்தானில் இடம்பெற்றது.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

மேற்படி 14 வயதுச் சிறுமியை 28 வயது இளைஞனுக்கு விவாகம் முடித்து கொடுக்கப்பட்டிருந்தது.

பிரஸ்தாப மணப்பெண் ஏற்கனவே இன்னொருவருடன் தொடர்பு வைத்திருந்தவர் என்ற விஷமத்தனமான செய்தியை யாரோ கணவனிடம் சொல்லியதை அடுத்தே கணவன் மனைவியை துடிதுடிக்க சுட்டுக்கொலை செய்துள்ளார்.

இத்தகைய விஷமத்தனமான செய்தியை அப்பெண்ணின் கணவன் வீட்டாரும் தெரிந்து கொண்டதை அடுத்து ஆத்திரமுற்ற அவர்கள் படுமோசமாக இச்செயலை செய்துள்ளனர்.

மணப்பெண்ணான சிறுமியை அழைத்து முதலில் கணவனின் சகோதரன் துப்பாக்கியால் சுட, அதனையடுத்து கணவன் உட்பட குடும்பத்து உறுப்பினர்கள் அனைவரும் மணப்பெண் மீது சரமாரியாக துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர்.

பொலிஸார் உடன்அவ்விடத்துக்கு விரைந்துசம்பந்தப்பட்ட அனைவரையும் கைதுசெய்து காவலில் வைத்துள்ளனர். (க-9)

### சேடப்பட்டியின்

# மேன்முறையீட்டு விசாரணைகள் வரும் தேர்தல் வரை நீடிக்கலாம்!

(சென்னை)

தமிழக முன்னாள் சபாநாயகர் முத்தையாவிற்கு வழங்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது.

இவ் விசாரணை அடுத்த தேர்தல் வரை நீடிக்கப்படலாம் என்று அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

தமிழக முன்னாள் முதல்வர் செல்வி ஜெயலலிதா மீது வழங்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு செய்திருந்தமையும் அந்த வழக்கு இன்னும் தீர்ப்பு வழங்கப்படாத நிலையில் இருப்பதும் தெரிந்ததே மேல் முறையீட்டுக்கும் நடக்கலாமென்றும் நோக்கர்கள் கருதுகிறார்கள்.

அதே வகையான ஒரு நிலைமை சேடப்பட்டியின் மேன் முறையீட்டுக்கும் நடக்கலாமென்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளையில் வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேகரித்த குற்றத்திற்காக சேடப்பட்டி முத்தையாவிற்கு சென்னைதனி நீதிமன்றம் 25 மாத கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கியதையடுத்தே இவர் மேன் முறையீடு செய்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க-து)

## முன்னாள் துணை மாகாண ஆளுநருக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது

### சீனாவில் துயர சம்பவம்

(பீக்கிங்)

சீனாவில், 6லட்சத்து50ஆயிரம் டொலர் இலஞ்சம் வாங்கிய முன்னாள் துணை மாகாண ஆளுநர் ஒருவருக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.

சியங்கி மாகாணத்தில் துணை ஆளுநராகக் கடமையாற்றிய பூட்டாசிங் என்பவருக்கே 50ஆண்டுகள் ஊழல் நடவடிக்கையில் ஈடுபட்டார் என்ற வகையில் மரணதண்டனை வழங்கப்பட்டது.

முன்னாள் துணை ஆளுநரால், தனக்கு வழங்கப்பட்ட தீர்ப்பினை எதிர்த்து மேன்முறையீடு செய்யப்பட்ட போதிலும் மக்கள் நீதிமன்றம் அம்மனுவை நிராகரித்ததுடன் உடனடியாகவே அவருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. (க-9)

### இமாலயப்பிரதேசத்தில்

# இருவேறுபட்ட சம்பவங்களில் 55பேர் வரையில் பலியாகினர்

[புதுடில்லி]

இந்தியாவின்இமாலயப் பிரதேசத்தில் இடம் பெற்ற இரு வேறு வீதி விபத்துக்களில் சுமார் 55 பேர் வரையில் பலியாகியுள்ளனர்.

திருமண விழாவில் கலந்து கொள்வதற்காக பெருமளவினர் பயணம் செய்த பஸ் வேறொரு வாகனத்துடன் மோதியதில் 45 பேர் கொல்லப்பட்டனர்.

பிறிதொரு சம்பவத்தில் புகையிரதம் ஒன்றுடன் வாகனம் மோதியதில் 10 பேர் கொல்லப்பட்டனர்.

படுகாயமடைந்தோர் உடனடியாக மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். (க-து)

## தாய்வானுக்கு ஆயுதங்கள் வழங்க அமிரிக்காவிடம் கோரிக்கை

(வோஷிங்டன்)

தாய்வானுக்கு அதன்தற்காப்புக்குத் தேவையான ஆயுதங்களை உடனே வழங்கவேண்டுமென தாய்வான் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமெரிக்க அதிபர் பில் கிளிங்டனிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தாய்வானை சீனாவுடன் இணைப்பது தொடர்பான பேச்சுவார்த்தை தோல்வி அடைந்தால் ஆயுதபலத்தை பயன்படுத்துவோம் என சீனா எச்சரித்துள்ளதை அடுத்தே இவ்வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

சீனாவை எச்சரிக்கும் வகையில் ஏவுகணை எதிர்ப்புச் சாதனங்கள் நவீன ராடர்கள் பொருந்திய நாசகாரிக் கப்பல்கள் உள்ளிட்டவற்றை வழங்கவேண்டும் என தாய்வான் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

இதே சமயம் 1979 இல் தாய்வான்நல்லுறவுச் சட்டத்தினை அமெரிக்கா இயற்றியதில் இருந்து தாய்வானின் தற்காப்புக்குத் தேவையான ஆயுதங்களை அமெரிக்கா வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (க-9)

## மகாத்மா காந்திக்கு சிலை எழுப்ப தென் ஆபிரிக்காவில் கோரிக்கை

(டேர்பன்)

தென்னாபிரிக்க நாட்டின் டேர்பன் நகரில் மகாத்மா காந்திக்குச் சிலை எழுப்ப வேண்டும் என்று அந்நாட்டு ஆளும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சியும் வரலாற்று அறிஞர் இஸ்மயில் மீரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தென்னாபிரிக்க அதிபர் தபோ எம்பகி கலந்து கொண்ட பொது நிகழ்ச்சி ஒன்றிலேயே மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இக்கோரிக்கைக்கு தென்னாபிரிக்க அரசியல் கட்சிகள் பலவும் ஆதரவு தெரிவித்துள்ளன.

டேர்பர் நகருக்கு வெளியே மகாத்மாகாந்தி துவக்கி நடாத்திய பினிக்ஸ் பண்ணையை மீண்டும் புதுபிக்க தென்னாபிரிக்க அரசு முடிவு செய்திருக்கும் இவ்வேளையில் சிலை எழுப்புவதும் பொருத்தமான தொன்று என நம்பப்படுகிறது. (க-9)

## செய்திக் குவியல்

★ அமெரிக்காவைச் சேர்ந்த ஜஸ்டின்சாம்மான் என்னும் 6 வயதுச் சிறுவன் பல்கலைக்கழகத்தில் படிக்கச் சேர்ந்துள்ளார்.

★ லண்டன் தமிழ் அவைக்காற்றுக் கழகத்தின் நாடகங்களைப் பார்த்த பலர் தமிழ் நாட்டு சின்னத்திரை நாடகங்களால் நாடகக் கலையே அழிந்து விடும் என்று கூறுகிறார்கள்

★ இந்தியா பி. எஸ். என்ற றொக்கற்றை திருந்திய வடிவில் சந்திரனுக்கு அனுப்ப இருக்கிறது.

★ அமெரிக்க அதிபர் இந்தியா வரும் பொழுது பல வர்த்தக நகரங்களுக்குச் செல்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

★ உலகில் மிகப்பெரிய உல்லாசப்படகு சவூதி அரேபியாவில் உள்ளது.

★ அவுஸ்திரேலியாவில் இலங்கையைச் சேர்ந்த டாக்டர் ஞானசேகரன் எழுதிய அவுஸ்திரேலிய பயணங்களை புரிதலும் பகிர்தலும் ஆகிய நூல்கள் வெளியிடப்படவுள்ளன.

## இராணுவத்துடன் ஏற்பட்ட முரண்பாடே தமது ஆட்சி கவிழ்ப்பிற்குக் காரணம்

### பாக். முன்னாள் பிரதமர் தெரிவிப்பு

(இஸ்லாமபாத்)

கார்கில் எல்லைக் கோட்டு விவகாரம் தொடர்பாக பாகிஸ்தான் இராணுவத்துடன் ஏற்பட்ட கருத்து முரண்பாடே தமது அரசாங்கம் பதவி கவிழ்க்கப்பட்டதற்குரிய முக்கிய காரணமாகும் பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரிப் தெரிவித்துள்ளார்.

ஆட்கடத்தல், விமானக் கடத்தல், பயங்கரவாதம், கொலை முயற்சி ஆகிய குற்றச்சாட்டுகள் தொடர்பாக கராச்சியின் சிறப்பு நீதிமன்றத்தில் முதல் முறையாக சாட்சிய மளிக்கையிலேயே ஷெரீப் இவ்வாறு தெரிவித்தார்.

சென்ற ஆண்டு கார்கில் குறித்த முஷாரப்பின் பயங்கரமான நிலைப்பாடு குறித்து கருத்து வேறுபாடு ஏற்பட்டமையே எனது பதவி கவிழ்ப்புக்குக் காரணம்.

தற்போதைய இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் பெர்வேஸ் முஷாரப் தனக்கெதிரான பல பயங்கரமானதும் பொய்யானதுமான குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ளார் எனவும் ஷெரீப் தெரிவித்துள்ளார். (க-9)

## இஸ்ரேல்-பாலஸ்தீன சமாதானப் பேச்சு மீண்டும் இடம்பெற வாய்ப்பு உண்டா?

(வோஷிங்டன்)

இஸ்ரேலும், பாலஸ்தீனமும் முறிவடைந்த சமாதானப் பேச்சுக்களை மீண்டும் தொடங்க இணக்கம் தெரிவித்துள்ளன.

இம்மாதம் முஸ்லிம் விடுமுறைகள் முடிவடைந்தபின் வோஷிங்டனில் வைத்துப் பேச்சுகள் இடம்பெறலாமென அமெரிக்க இராஜாங்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஒரே நாளில் இஸ்ரேலியப் பிரதமர் எஹிட் பராக்கையும் பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத்தையும் சந்தித்துப் பேசியதன் பேரிலேயே மேற்படி இணக்கப்பாடு ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. (க-9)

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

**அன்பு வாசகர்களே!**

உங்கள் அறிவியலுக்கான தேடலை ஊக்குவிக்கும் முகமாக பொது அறிவுக்குரிய வினாக்கள் வெளியிடப்படும். அதற்குரிய விடைகளை நேரில் அல்லது தபாலில் அடுத்த வியாழக்கிழமைக்கு முன்பாக வலம்புரிக்கு அனுப்பி வையுங்கள்.

அதிக புள்ளிகள் எடுத்தவர்களின் பெயர்களும் வினாக்களுக்கான வீடைகளும் அடுத்து வரும்வெள்ளிக்கிழமை வெளிவரும்.

குறிப்பு:- இப்பொது அறிவுப் போட்டியில் ஆர்வமுள்ள எவரும் கலந்து கொள்ளலாம்.

(ஆ-ர்)

# பொதுஅறிவுவினாக்கள்

இல - 04 (தொகுப்பு:- யூட்)

★ **பின்வரும் வினாக்களுள் உலகில் பெரியவை எவை என எழுதுக?**

(1) மிகப் பெரிய நூதனசாலை ....................
(2) மிகப் பெரிய மணிக்கூடு ....................
(3) பெரிய உப்பு ஏரி ....................
(4) பெரிய கட்டடம் ....................
(5) உயரமான வெளிச்சவீடு ....................

★ **பின்வரும் நாடுகளின் தலை நகரங்கள் எவை?**

(6) அவுஸ்திரியா ....................
(7) லெபனான் ....................
(8) நைஜீரியா ....................
(9) பங்களாதேஷ் ....................
(10) மெக்சிக்கோ ....................

★ **ஐக்கிய நாடுகள் சபையால் பிரகடனப்படுத்தப்பட்ட பின்வரும் தினங்களிற்கான நாட்கள் எவை?**

(11) போதைப்பொருள் ஒழிப்பு நாள் ....................
(12) உலக விலங்கு நாள் ....................
(13) உலக உளநல நாள் ....................
(14) குடும்ப நல நாள் ....................
(15) சனத்தொகை தினம் ....................

★ **பின்வரும் நாடுகளின் பாராளுமன்றங்களை எவ்வாறு அழைப்பர்?**

(16) சுவீடன் ....................
(17) சீனா ....................
(18) ஆஸ்திரேலியா ....................
(19) டென்மார்க் ....................
(20) இஸ்ரேல் ....................

★ **பின்வரும் நாடுகளின் நாணய அலகுகளின் பெயர்களைத் தருக?**

(21) மெக்சிக்கோ ....................
(22) தாய்லாந்து ....................
(23) பர்மா ....................
(24) மலேசியா ....................
(25) வத்திக்கான் ....................

★ **கீழ்வரும் புனைப் பெயர்களிற்குரிய நாடுகள் எவை?**

(26) ஐரோப்பாவின் போர்க்களம் ....................
(27) உலகின் கூரை ....................
(28) ஐரோப்பாவின் நோயாளி ....................
(29) மரகதத்தீவு ....................
(30) சர்க்கரைக் கிண்ணம் ....................
(31) ஒரு நாள் சர்வதேச கிறிக்கெட் போட்டி எந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது? ————
(32) முதலாவது மகளிர் உலக கோப்பை கிறிக்கெட் போட்டி எப்போது ஆரம்பமானது? ————
(33) உலகில் மழை கூடிய பிரதேசம் எது? ————
(34) நாக்கு இல்லாத விலங்கு எது? ————
(35) எகிப்தியின் 365 நாள் கலண்டர் எப்போது பின்பற்றப்பட்டது? ————
(36) பிளாஸ்டிக்கைக் கண்டு பிடித்தவர் யார்? ————
(37) இத்தாலியின் தங்க ஆப்பிள் என எதைக் கூறுகின்றனர்? ————
(38) நாட்டின் கொடியின் நடுவே எந்த ஒரு சின்னமும் கொண்டிராத நாடு எது? ————
(39) பிலிப்பைன்ஸ் எத்தனை தீவுகளைக் கொண்ட நாடு? ————
(40) இலியட் ஒடிசி ஆகிய உலக புகழ்பெற்ற இதிகாசங்களைத் தந்த நாடு எது? ————

## அறிவியல் பகுதி வினா இல. 04

**வலம்புரி**

இல 15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

முழுப்பெயர்:- ....................

சொந்த முகவரி:- ....................

கையொப்பம்:- ....................

இப்படிவத்தைப் பூரணப்படுத்தி உங்கள் விடையுடன் தவறாது இணைத்து அனுப்பி வைக்கவும்.

# பொது அறிவு வினா இல. 03

அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம் வருமாறு.

(01) செ. வசந்திகுமாரி, நல்லூர்.
(02) பா. துவாரகன், சுன்னாகம்.
(03) சி. சயந்தன், வட்டுக்கோட்டை.
(04) க. சிவமலர், வேலணை.
(05) உ. கபிலன், பருத்தித்துறை.
(06) தி. தில்லைநாதன், யாழ்ப்பாணம்.
(07) கு. ராதிகா, சண்டிலிப்பாய்.
(08) பி. பரமேஸ்வரி, நல்லூர்.
(09) பா. செந்தூரன், கொக்குவில்.
(10) க. பிரியவதனா, நல்லூர்.
(11) லோ. தவசீலன், உரும்பிராய்.
(12) தெ. வக்ஷலா, பளை.
(13) யோ. பார்த்தீபன், சாவகச்சேரி.
(14) மு. சிவகணேசன், நெல்லியடி.
(15) கோ. கஸ்தூரி, கோண்டாவில்.

# பொது அறிவு வினா இல. 03இற்கான விடைகள்

[01] சீனப் பெருஞ்சுவர் (கி.மு. 228 ஆம் ஆண்டில் கட்டப்பட்டது)
[02] ரிகாவிலிருந்து வால்டிவேல்டக்வரை (ரஷ்யாவில் 6000 மைல்)
[03] மிசூரி மிசிசிப்பி (வட அமெரிக்கா)
[04] திக்கோழி [05] எவரெஸ்ட் [06] ஹனேன்
[07] மாலி [08] பாங்கொக் [09] ரங்கூன்
[10] மணிலா [11] மார்ச் 22
[12] ஏப்பிரல் 23 [13] மே 31
[14] ஒக்ரோபர் 31 [15] டிசம்பர் 5
[16] உவாற்றன் [17] எல். டாகுரோ
[18] சேர்சாள்ஸ் நட்பியர் [19] சீனர்
[20] சேர்.எவ். பான்சிங்
[21] காங்கிரஸ் [22] மஜ்ஜீவிஸ்
[23] மக்கள் சபை செனட் [24] லோக்சபா
[25] டயட் [26] நியுசிலாந்து [27] ரோமாபுரி
[28] சென் பிரான்சிஸ்கோ [29] கொரியா
[30] ஆபிரிக்கா [31] 1945 ஒக்ரோபர் 24
[32] பாரிஸ் நகரம் [33] மொனாக்கோ
[34] பெங்குயின் [35] இந்தியா
[36] சவூதிஅரேபிய நியற் விமான நிலையம்
[37] 1984 ல் [38] 1986 ல்
[39] எட்மன்டஹுயி [40] சீனா

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மத்திய சன சமூகநிலையத்தால் வருடா வருடம் நடாத்தப்படும், மட்டுப் படுத்தப்பட்ட 30ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டிக்கு,யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தால் பதிவு செய்யப்பட்ட கழகங்களிடமிருந்துவிண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (செ)

## யாழ்.மாநகர சபை துண்டுப்பிரசுரம் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் நகர்ப்புற அடிப்படைச் சேவைகள் நிகழ்ச்சித்திட்டப் பிரிவு புத்தாயிரமாமாண்டின் முதலாவது அனைத்துலக மகளிர் தினத்தை முன்னிட்டு ''எமது அன்பான வேண்டுகோள்,,என்றதலைப்பிலான துண்டுப்பிரசுரம் ஒன்றினை வெளியிட்டுள்ளது. (க-9)

## இரு சிறுவர் காயம்

மர்மமான பொருள் ஒன்றையெடுத்து விளையாடமுற்பட்ட போது அது வெடித்ததில் இரு சிறுவர்கள் படுகாயமடைந்த நிலையில் மல்லாவி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 3மணியளவில் மல்லாவியிலுள்ள திருநகரில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த வெற்றிவேல் கிருஷா (வயது 15) வெற்றிவேல் நிஷாந்தன் (வயது 12) ஆகியோரே படுகாயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளவர்களாவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# கிராம ரீதியாக ஆய்வுசெய்யும் படைப்பாளிகள் போற்றுதற்குரியோர்

## நூல்வெளியீட்டில் பேராசிரியர் உரை

(யாழ்ப்பாணம்)

ஆய்வாளர்கள் பராட்டப்படவேண்டியவர்களே கிராம ரீதியாக ஆய்வுகள் நடாத்தி நூல் வடிவமாக்கி வெளியிடும் ஆய்வாளர்கள் உண்மையிலேயே பாராட்டப்படவேண்டியவர்களே என்று நீர்வேலி காமாட்சி அம்பாள் கோயில் வீதியில் நடைபெற்ற 'புகழ் பூத்த நீர்வேலி' நூல் வெளியீட்டு விழாவில் ஆய்வுரை நிகழ்த்திய யாழ். பல் கலைக்கழக உயர் மட்ட ஆய்வுபீட பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்.

யாழ். பல்கலைக்கழக வணிகத்துறை விரிவுரையாளர் தி. வேல்நம்பி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பேராசிரியர் தொடர்ந்து பேசுகையில் பட்டப்படிப்பிற்காக ஆய்வு செய்பவர்கள் தனித்து ஒரு விடயத்தை மட்டுமே ஆய்வு செய்வார்கள். ஆனால் இந்த நூலாசிரியர் த. பரராஜசிங்கம் அவர்களோ நீர்வேலிக் கிராமத்தை முழுமையாகப் பல துறைகளிலும் நன்கு ஆய்வு செய்தே இந்த நூலை ஆக்கியுள்ளார்.

அவரது ஆய்வுத்திறன் பாராட்டப்பட வேண்டியதாகும் தேவைக்கேற்ற படி கிராமத்தை பதினான்குபிரிவுகளில் ஆய்வு செய்தே வேண்டிய விபரங்களுடன் இந்த நூல் ஆக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்நூலாசிரியரின் கிராமப்பற்றும், இறைபக்தியும் இந்நூல் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இப்படியான ஆய்வாளர்கள் உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டியவர்களாகும் எனவும் உரையாற்றினார்.

தொடர்ந்து யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத் துறைத் தலைவர் பேராசிரியர் ச. சத்தியசீலன் பேசுகையில் கிராம ரீதியான ஆய்வு நூல்கள் மிகமிகஅவசியமானதே அவற்றை ஆய்வு செய்து படைப்பவர்கள் திறமைசாலிகளே இப்படியான நூல்கள் வாயிலாக அந்தந்தக் கிராமங்களின் மண்வளம்,மக்கள் தொழில் வளம், சுவாத்திய வேறுபாட்டு நிலைகளை அறியக் கூடிய தாக் விருக்கின்றது.

இம் மலராசிரியர் முதலில் இலங்கை, ஈழம், வலிகாமம், நீர்வேலி என்பனவற்றை நன்கு ஆய்வு செய்து தனது கிராமத்தை வெளியிடமக்கள் அங்கு செல்லாவிட்டாலும் இந் நூல் மூலமாக நன்கு அறிந்து கொள்ளக் கூடிய வகையில் ஆக்கியுள்ளார்.

கிராமத்தைப்பற்றி அறிய விரும்புபவர்கள் கிராமத்தின் பல திறப்பட்ட செயற்பாடுகளையும் நன்கு அறியக் கூடியவகையில் ஆய்வு செய்து இந் நூல் எழுதப்பட்டுள்ளது இது ஒரு பொக்கிஷம் என் நால் மிகையாகாது - நூலாசிரியரின் ஆய்வுத்திறன் பாராட்டப்பட வேண்டியதாகும். இக் கிராமமக்கள் இந் நூலாசிரியருக்கு என்றும் கடமைப்பட்டவர்களே எனக் குறிப்பிட்டார்.

புத்தூர் விவசாய விரிவாக்க உத்தியோகஸ்தர் இ. சௌந்தரராசன் பேசுகையில் இக் கிராமத்தின் கூட்டுறவு சிறப்பு மற்றும் கல்விச்சிறப்பு, ஆலய சிறப்பு, சமூக சேவைச்சிறப்பு பெரியார் சிறப்பு எல்லாம் சகல மக்களும் அறியக் கூடிய வகையில் இந்நூல் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

மேலும் இந்நூலாசிரியரின் ஆய்வுத் திறன் பாராட்டப்பட வேண்டிய தாகும். இவர் அடுத்தபடியாக வலிகாமம் கிழக்கு பிரதேசம் என்ற தலைப்பில் ஆய்வு செய்து வெளியிடவேண்டுமெனக்கேட்டுக்கொண்டார்.

கூட்டுறவு மகளிர் குழுத் தலைவி திருமதி ருக்மணி ஆனந்தவேல் பேசுகையில் சிறந்த ஆய்வாளன் மட்டுமல்ல சிறந்த சமூக சேவையாளராகவும் விளங்குகின்ற பரராஜசிங்கம் பொருளாதாரக் கஷ்டமான சூழ்நிலையிலும் இப்படியான ஒரு மகத்தான பணியைச் செய்து எமது கிராமத்துக்கே புகழைத் தேடித்தந்துள்ளார் அவரது இந்தப்பணியைப் பாராட்டி இக்கிராம மக்கள் அவரைக் கௌரவிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

பிரமுகர்கள் பலர் இந் நிகழ்வில் கலந்து கொடனர். (க)

# ஆண் பெண் சமத்துவத்தின் மூலமே பூரணமான உ_ரிமையை பெறமுடியும்

### பதில் மேலதிக அரச அதிபர் தெரிவிப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ். மகளிர் ஆய்வு அபிவிருத்தி நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்றது.

மகளிர் ஆய்வு அபிவிருத்தி நிறுவனத் தலைவி செல்வி. ரி. வத்சலா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து உரையாற்றிய யாழ். அரச அதிபர் கே. சண்முகநாதன் தமது உரையில்,

பெண்கள் எல்லோரினதும் பிரச்சினைகளை முன்னெடுத்துச் செல்லும் ஒரு அமைப்பாக இந்நிறுவனம் விளங்குகின்றது என்று தெரிவித்தார்.

இன்று இம் மகளிர் தின நிகழ்வில் இவ்வளவு தொகையான மகளிர் கலந்து கொண்டிருப்பதானது எமக்கு ஒரு நம்பிக்கையைத் தருகிறது என்று அரச அதிபர் தெரிவித்தார்.

இந்நிறுவனத்தின் போஷகரும் மேலதிக அரச அதிபருமான திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் உரையாற்றுகையில்,

1975 இல் ஐக்கிய நாடுகள் சபையில் மகளிர் தினம் பிரகடனப் படுத்தப்பட்டதென்றும் ஆணும் பெண்ணும் சமத்துவமடைய வேண்டுமென்றும் தெரிவித்த அவர் சமுதாயத்தின் இரண்டு கண்களே ஆணும் பெண்ணும் எனவே ஆணுடன் பெண் சமத்துவமடைவதன் மூலமே முழுமையான உரிமைகளை பெறமுடியுமெனவும் தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய பதில் மேலதிக அரச அதிபர்; இந்த ஆண்டின் தொனிப் பொருள் சமாதானமாகும். இது ஏற்பட வேண்டுமானால் சமத்துவம் ஏற்படவேண்டும் எமது யாழ், குடாநாட்டைப் பொறுத்த வரையில் இது இன்னும் முழுமையடையவில்லை. இக்குறிக்கோளை அடைய எமது நிறுவனம் தொடர்ந்து பாடுபடுமெனவும் அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கல்விப்பணிப் பாளர்கள், பல் கலைக்கழக மகளிர் அணியினர், மற்றும் பல்வேறு அரச அதிகாரிகள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். தொடர்ந்து மகளிர் தினத்தையொட்டி நடாத்தப்பட்ட வலைபந்தாட்டப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் சான்றிதழ்கள் வழங்கலும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (க-3)

## வைத்தியசாலைக்கு செல்ல முடியவில்லை நடுவீதியில் இடம்பெற்ற பிரசவம்

[மட்டக்களப்பு]

வீதி சீரின்மையால் விரைவாக வைத்தியசாலைக்குச் செல்ல முடியாத நிலையில் நடுவீதியில் பிரசவம் இடம் பெற்ற சம்பவம் மட்டக்களப்பு காத்தான்குடியில் இடம் பெற்றது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது; காரில் வைத்தியசாலைக்கு சென்ற குடும்ப மாது ஒருவர் விரைவாக செல்ல முடியாத நிலையில் நடுவீதியிலேயே குழந்தையை பிரசவித்தாராம்.

இதே வேளையில் கஞ்வாஞ்சிக்குடி படைமுகாம்களுக்கும் வீதி உட்பட இதர வீடுகள் பலவும் சீரற்று குன்றும் குழியுமாகக் காணப்படுவதாக புகார் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் பொது மக்கள் பெரிதும் இன்னலுறுவதாக உயர் அதிகாரிகள் கவனத்திற்கு கொண்டு வந்தும் கூட உரிய நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லையாம். (க-60)

### அளவெட்டி

## நாதஸ்வரமேதை பத்மநாதன் குழுவினர் அவுஸ்திரேலியா பயணமாகினர்

அளவெட்டி நாதஸ்வர மேதை என்.கே. பத்மநாதன் சாவகச்சேரி பஞ்சாபிகேசன் தவில், தட்சணாமூர்த்தி உதய சங்கர் / சின்னப்பழனி முருகதாஸ் ஆகியோர் கடந்த திங்களன்று அவுஸ்திரேலியா பயணமானார்கள்.

சிட்னி முருகன் வருடாந்த மஹோற்சவத்தையொட்டி சென்றிருக்கும் இவர்கள் வேறுபல நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்வார்களென அறிகிறோம். (நு)

## அர்ஜுனா அவுஸ்திரேலியா பயணம்

[கொழும்பு]

இலங்கை கிறிக்கெட் குழுவின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்குகின்ற அர்ஜுணரணதுங்க இடதுகையில் ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சை பெறும் முகமாக அவுஸ்திரேலியா பயணமானார்.

அவுஸ்திரேலியாவின் முக்கியநகரான மெல் போர்ஸன் மருத்துவமனையில் 10நாட்கள் தங்கி இவர் சிகிச்சை பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. [க]

## பாகிஸ்தானிய பெண்ணின் கடத்தல் முயற்சி முறியடிப்பு

### கட்டுநாயக்காவில் சம்பவம்

(கொழும்பு)

பாகிஸ்தானில் இருந்து இலங்கை வந்த பாகிஸ்தானியப் பெண்மணியொருவர் நேற்றுக்காலை ஒரு கிலோ ஹெரோயினைக் கடத்துவதற்குமேற் கொண்ட முயற்சி முறியடிக்கப்பட்டது

800க்கும் கூடுதலான சிறிய பைகளில் சந்தேகம் ஏற்படாத வகையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஹெரோயின் போதைப் பொருளை சுங்கப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

போதைப் பொருளின் பெறுமதி 20 இலட்சத்திற்கும் அதிகமானது. கடத்தலில் ஈடுபட்ட பெண் மீதான விசாரணைகள் தொடர்கின்றன. (க-9)

## சைவ வித்தியா விருத்திச் சங்க பவளவிழா முதல்நாள் நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி சைவவித்தியா விருத்திச் சங்க பவளவிழா நிகழ்வுகள் நாளையும் நாளை மறுதினமும் இடம் பெறவுள்ளன.

நாளைய நிகழ்வுகள் காலை 9 மணியளவில் இல்லச் சிறார்களின் தேவாரத்துடன் ஆரம்பமாகி பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் இடம் பெறும்.

ஆசியுரையை நல்லைஆதீன குருமகாசந்நிதானத்தைச் சேர்ந்த ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் நிகழ்த்துவார்.

சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி வாழ்த்துரை வழங்குவார். சிறப்புரையை யாழ்ப்பாண அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் நிகழ்த்துவார்.

இந்நிகழ்வில் பெரியார் இந்து போர்ட் இராசரத்தினம் அவர்களின் சிலையை அரச அதிபர் கே. சண்முகநாதனும் இல்லச் சிறுமி ஒருவரும் திறந்து வைத்து மலர் அஞ்சலி செலுத்துவர்.

பாராட்டுரைகளை, நல்லூர் பிரதேச செயலர் பி.செந்தில் நந்தனன் தெல்லிப்பழை பிரதேச செயலர் திருமதி ப.திலகநாயகம் திருநெல்வேலி பிரதேச சபைத் தலைவர் கே.மணிபல்லவராஜன்யாழ் மாவட்ட சிறுவர் நன்னடத்தை அதிகாரி திருமதி க.சிவராஜா, ஜி.ரி.சற். நிறுவனத்தைச் சேர்ந்த திருமதி இ.பொன்மலர் ஆகியோர் வழங்குவார்கள்.

ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் முத்துத்தம்பி மகாவித்தியாலய அதிபர் த.சிவராஜா உயர்கல்வி நிலைய இயக்குநர் திருமதி ச. அருள்நங்கை ஆகியோர் நினைவுரைகளை நிகழ்த்துவர்.

சைவச்சிறுவர் இல்லச் சிறார்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

சைவவித்தியா விருத்திச் சங்க செயலாளரின் நன்றியுரையுடன் முதல் நாள் நிகழ்வுகள் முடிவுறும். (க-9)

## ஐயப்பன் பாத மலர் நாடு

ராகம் : கரகரப்பிரியா தாளம் : ஆதி

**பல்லவி**

ஐயப்பன் பாதமலர் நாடு - மனமே
வையகமீதில் சுன்னைவளரும் அருள் அழகன்

**அனுபல்லவி**

மெய்யப்பனாம் அரனும் மேவும் அரியுமீன்ற
துய்ய புதல்வனவன் துரிய சேவடிபாடு.

**சரணம்**

அரிஹர புத்திரன் அருள் தருவான் இந்த
அகில காரணன் அவன் அனுக்கிரகம் தருவான்.
விரிமலர் தனைசூழும் வியன்மிகு சுன்னாக
புரியதில் வாழ்பவனைப் புனைந்து கவிபாடி.

இயலிசைவாரிதி என். வீரமணி ஐயர்

(சுன்னாகம் ஐயனார் ஆலய வருடாந்த உற்சவத்தை ஒட்டி இக்கீர்த்தனை பிரசுரமாகிறது.)

## உண்மையை எழுதி உறுதியாய் நடந்திடு

களம்பல கண்டு கவலையுறு வானமதில்
இளம்பிறையாய் ''வலம்புரி''யே நீ தோன்றி சிலமாதம்.
நலம் பெறவும் புகழ்பெறவும் இறையருளைப் பெற்று
துலங்கிடுக முழுநிலவாய் வளர்ந்து !
விளம்பிடுக விரிவாக விசயங்கள் அனைத்தையுமே
விளம்பரத்தை நீட்டாதே விசயங்கள் சுருங்கிவிடும்
தளம்பாத நிலையினிலே தைரியமாய் நடந்திட்டால்
வளம் பெறுவாய் வாசகர்கள் விரும்பி.
உண்மையை எழுதியே உறுதியாய் நடந்துகொண்டால்
உன்னை உடைப்பதற்கு யாரும் துணியார்கள்
நன்மை தீமையெல்லாம் சுழலும் சக்கரங்கள் இதை
எண்ணியே நீயும் என்றென்றும் வாழ்ந்திடுவாய்!

க. அருமைநாயகம்
(குளப்பிட்டி)

# மும்மணி போல பெண்மணி மூவர்

பெரிய புராணத்தில் பேசப்படுகின்றன. பெண்கள் அனைவரும் தெரிந்து எடுத்த முத்துக்கள் அவர்கள் சைவத்தையும். தமிழையும் பேணிச் சிவநெறியில் செம்மையாக நின்று ஒழுகியவர்கள். பெண்களுக்குத் தூண்டா மணி விளக்குப் போல என்றும் நின்று சுடர்பவர்கள் அவர்களில் மூவரை இரத்தின மணிகள் போல எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம்.

திலகவதியார், புனிதவதியார், மங்கையர்க்கரசியார் ஆகியவர்களே அம்மும்மணிகள் சிவபெருமானுடைய ஒரு திருமுகத்தில் நிகழும் மூன்று திருக்கண்கள் போன்றவர்கள் அம்முன் மாதிரியான மாதர்கள் மூவரும்.

திலகவதியார் பெற்றோரால் மணம் பேசி இருந்தும்

### சிவ. சண்முகவடிவேல்

மணத்தை இழந்தவர் 'தம்பியார் உளராதல் வேண்டும்' என வைத்த தயவினால் மணம் பேசி வைத்த கலிப்பகையார் உடன் செல்லார். ஒன்றான உயிர் தாங்கி அப்பொன்மணி நூல் தாங்காது அனைத்துயிர்க்குஅருள் தாங்கி இம்பர்மனைத் தவம் புரிந்து இருந்தார். திலகவதியார் அவருடைய அன்பும் அருளும் சகோதர உறவும் மருணீக்கியாரைத் திருநாவுக்கரசு ஆக்கி வைத்தது. சைவப் பேருலகிற்குச் சமயாசாரியர் ஒருவரை உருவாக்கி தந்தது.

புனிதவதியார் திருமணம் ஆனவர் கணவன் பரமதத்தன் வங்கம் ஓட்டிச் செல்வவளம் பெருக்கித் திரும்புவான் என எண்ணி இருந்தார். மாருகக் கணவன் சென்ற தேசத்தில் திருமணம் செய்து சிறப்போடு வாழ்ந்திருப்பதை நேரே சென்று கண்ணினால் கண்டார். கணவன் முன்னிலையில் கடவுளிடத்தில் வேண்டுகின்றார். ஈங்கிவன் குறித்த கொள்கை இது. இனி இவனுக்காகத் தாங்கிய வனப்பு நின்ற தசைப்பொதிகழித்தில் குன்பால் ஆங்குநின் தாங்கள் போற்றும் பேய்வடிவு அடியேனுக்குப் பாங்குற வேண்டும், என்று பரமர் தாள் பரவி நின்றார். வேண்டுவார் வேண்டுவதை ஈயும் வெள்விடை ஊர்திப் பெருமானும் அம்மையாரின் வேண்டுதலை அருளிச் செய்தார்.

மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம் பாண்டிய மன்னனுடைய பட்டத்தரசியாகப் பரிமளித்தவர். ஆளுடைய பிள்ளையாரின் புனித வாக்கால் தேசுடைய திருப்பதிகப் பாடல் பெறும் தவத்தையுடையவர். மன்னனோடு மானியர் வாழ்ந்தும் அவன் கருத்தளிந்து தழுகியும் பாண்டியனை பரசமயத்தில் இருந்து மீட்டும் சிவநெறியில் நழுகச் செய்தவர்.

தென்னலன் பெருந்தேவியார் பாண்டிய நாட்டிற்கு சிவக்கன்றினை வரவழைத்தார். கணவனான சிவ நெறியில் மீட்டது மாத்திர மன்றிப் பாண்டிய நாட்டில் மீண்டும் திருநீற்றையும் திருவைந்தெழுத்தையும் என்றும் நிலையாக நின்று ஓங்கச்செய்தவர்.

திலகவதியார் மணம் பேசி வைத்த மணாளன் புகழுடம்பு பெற்ற பின்பு தம்பியாருக்காக தவநெறியில் ஒழுகினார்.

காரைக்காலம்மையார் கணவன் மறுத்த பின்பு கணவனுக்காகப் போற்றிய தசைப் பொதியை நீக்கிப் பேய் வடிவமானார். மங்கையற்கரசியார் மன்னனோடு வாழ்ந்தும் திருநீற்றினையும் சிவ பெருமானையும் பேணி - மீண்டும் கணவனைத்தம்வழியில் - மேன்மைகொள் சைவநீதியில் நிறுத்திய பெருமைக்குரியவர்.

சைவப் பேருலகில் செயற்கரும் செயலில் நின்று ஒழுகிய பெண்மணிகள் மூவரும் சிவநெறி ஒழுக்கத்திற்கு என்றும் வழிகாட்டும் ஒளி விளக்குகள்.

அவர்கள் போற்றப்பட வேண்டியவர்கள் வணங்கப்பட வேண்டியவர்கள் வாழ்க்கை நெறிக்கு வழிகாட்டிகளாகக் கொள்ளப்பட வேண்டியவர்கள் ஆவார்கள்.

★

## பூசிக்க அல்லலெல்லாம்பொசுங்கிப் போமே

மருந்தெனும்வெண் பொடியழகு மாபிலங்க
மாகருணை பொழியுவிழி மலர்ந்துலங்கத்
திருந்திடுவா லாம்பிகைச்சே யிழையினோடு
தினந்தொழுவார்க் கிரங்கியருள் தேவ தேவை!
அருந்தமிழ்ப்பா மாலையினை அன்பாய்ப் பாடி
அடைதுயரம் கெடஅவனின் நாமம் ஓதி
பொருந்திடுவண் ணைவைத்தீஸ் வரனை! நாளும்
பூசிக்க அல்லலெலாம் பொசுங்கிப் போமே.

'முருகநேசன்'

யாழ் வண்ணை ஸ்ரீவைத்தீஸ்வரன் மகோற்சவ சிறப்புமலர்

துன்பம் உறவரினும் செய்க துணி வாற்றி
இன்பம் பயக்கும் வினை.
- குறள்

# வலம்புரி

## வழிகாட்டிகள்

உதாரண புருஷர்களாய் விளங்கினால் மட்டுமே வழிகாட்டும் தகைமையுடையவராவர். சொல்லும் செயலுமாய் வாழ்பவர்கள் செகம் சிறக்க வகை செய்தவர்களாகின்றனர். இந்த மண்ணின் ஏக்கம் தவிர்க்க வேண்டுமானால் ஒவ்வொருவரும் எழுச்சி பெற வேண்டும். புத்தன், காந்தி, ஏசு, நபிபோன்ற உளத்திறன் மிக்க உத்தமர்கள் வாழ்வு மனத் தடங்கண் என்றும் நின்று நிலைக்கும்.

இந்தத்தடங்களை ஏன் மண்ணின் வழிகாட்டிகள் புரிந்து கொள்ள மறுக்கிறார்கள் மூசிப் பெய்யும் மாசிப்பனியில் நனைவது போல அழுக்காற்று வெள்ளத்தில் நனைந்து மண்ணை வெம்மையாக்குகிறார்கள். மண்ணை செம்மையாக்குவதற்குப் பதிலாக சிவப்பாக்குகிறார்கள்.

இற்றைக்குப் பல ஆண்டுகளுக்கு முன் ஜனித்த குரல் 'கற்பவை கற்று நிற்க' அதற்குத்தக என்பதாகும். மனித வெள்ளம் உனக்கல்லடி உபதேசம் என்று ஏனோ தானோ என்று வாழப் பழகிய காரணத்தில் அமாவாசை இருட்டில் அவலப்படுகின்றனர்.

புலர வேண்டுமானால் உள்ளம் உண்மையுணரும் செம்மை நெறியில் மலர வேண்டும். மலரவேண்டுமானால் தன்னல மறுத்தல் தழைக்க வேண்டும். தழைக்கவேண்டுமானால் உண்மை உணர்வுடன் உழைக்க வேண்டும்.

தியாக உள்ளங்கள் தன்னலமற்ற சிந்தையோடு சேவையில் ஈடுபடவேண்டும். மன்பதைக்குமாண்பு சேர்க்க வேண்டும். கொடுப்பாருமில்லை- ஏற்பாருமில்லை என கோசல நாட்டைக் கம்பன் வரைவுபடுத்தியது போல் புன்னெறி என்றால் புதுமையாக விருக்க வேண்டும். செந்நெறி ஒன்றே தெரிந்ததும் தெளிந்ததுமாக வேண்டும்.

வழிகாட்டிகள் வாழ்வியல் ஊக்கிகளாகட்டும் அறிவுப்பசி சான்றாண்மை என்பன தழைக்க வேண்டும். வழிகாட்டிகளின் மேம்பாட்டிலே தான் வழி வழி வாழ்பவர்கள் மேலோராகத் திகழக் கூடும். நாட்டின் நல்லோர்கள் மலிந்தால் துன்பச் சூழல் அற்றதாகும். நாடு ஏற்றதாகும். நாடு ஏற்றமுறும்.

- அன்புடன் ஆசிரியர்

யாழ். குடாநாட்டில்

# 708 முன்பள்ளி ஆசிரியைகள் கஷ்ட நிலையில் பணிபுரிகின்றனர்

## புள்ளி விபரங்கள் தெரிவிப்பு

(தென்மராட்சி)

யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள 15 பிரதேச செயலர் பிரிவுகளிலும் நடாத்தப்பட்டு வருகின்ற 565 முன்பள்ளிகளில் மொத்தமாக 13 ஆயிரத்து 289 பாலர்கள் கல்வி கற்று வருகின்றனர் எனவும் இத்திட்டத்தில் மொத்தம் 708 முன்பள்ளி ஆசிரியைகள் சேவையாற்றி வருகின்றனர் என பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தினால் அண்மையில் பிரதேச செயலர் பிரிவு ரீதியாகத் திரட்டப்பட்ட புள்ளி விபரங்கள் மூலம் தெரிய வந்துள்ளது.

மொத்தமாக இயங்கிவருகின்ற 565 முன்பள்ளிகளுள் 518 முன்பள்ளிகள் உள்ளூராட்சித் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட நிலையிலும் 47 முன்பள்ளிகள் பதிவு செய்யப்படாத நிலையிலும் இருப்பதாகப் புள்ளி விபரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

அத்துடன் இவற்றுள் 168 முன்பள்ளிகள் தற்காலிகக் கட்டிடங்களிலும் 227 நிரந்தரக் கட்டிடங்களிலும் இயங்கிவருகின்றன. அதே சமயம் 201 முன்பள்ளிகள் திருத்தம் செய்யப்பட வேண்டிய நிலையிலும் இருக்கின்றன.

கடந்த வருடம் மொத்தமாக 49 முன்பள்ளிகளுக்கு பிரதேச சபைகள் பிரமாண அடிப்படையிலான நிதி பன்முகப்படுத்தப்பட்ட நிதி, விசேட நிதி மற்றும் கியூடெக்கின் நிதி மூலம் தளபாடங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

மேலும் மொத்தமாக இயங்கிவருகின்ற முன்பள்ளிகளுள் 232க்கு குடிநீர் வசதிகள் அற்ற நிலையிலும் 351க்கு மலசலகூட வசதிகள் இல்லாத நிலையிலும் 218க்கு தளபாட வசதிகள் இல்லாத நிலையில் இருப்பதாகவும் அறியப்படுகின்றது.

இது இவ்வாறிருக்க கடந்த வருடம் திட்ட அமுலாக்கல் அமைச்சின் நிதியுதவியுடன் 8 முன்பள்ளிகளுக்கு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் நிதியுதவியுடன் 32 க்கும் சனசமூக நிலையங்களின் உதவியுடன் 8 க்கும் உள்ளூராட்சித் திணைக்களத்தின் நிதியுதவியுடன் 51 முன்பள்ளிகளுக்குமாக மொத்தம் 99 முன்பள்ளிகளில் பயின்ற பாலர்களுக்குப் போசாக்கு உணவு வழங்கப்பட்டதாகவும் புள்ளி விபரங்கள் எடுத்துக்காட்டியுள்ளன.

மேலும் யுனிசெப் நிறுவனத்தின் ஆதரவுடன் குடாநாட்டில் 480 முன்பள்ளி ஆசிரியைகளுக்கும் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. இது தவிர யாழ். மாவட்ட சர்வோதயம் 263 முன்பள்ளி ஆசிரியைகளுக்கும், கியூடெக் 37 ஆசிரியைகளுக்கும் மூளாய் பாலர் கல்வி நிறுவனம் 90 பேருக்கும் பயிற்சிகள் வழங்கியுள்ளதாகவும் தெரியவருகின்றது.

அத்துடன் குடாநாடு தழுவிய வகையில் இன்னமும் சுமார் 3 ஆயிரம் பாலர்கள் முன்பள்ளிக் கல்வியில் இணைக்கப்படாமல் இருந்து வருவதாகவும் தெரியவருகின்றது,

மேலும் 30 முன்பள்ளிகளுக்கு மட்டுமே கடந்த வருடத்தில் கற்பித்தல் விளையாட்டு உபகரணங்கள் கியூடெக், யுனிசெப் போன்ற நிறுவனங்களால் வழங்கப்பட்டுள்ளதுஎன்பதும்குறிப்பிடத்தக்கதாகும்.

(க-77)

## தமிழ்த் தீவிரவாத அமைப்பு ஒன்றின் முன்னாள் உறுப்பினர் சுடப்பட்டார்

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு ஜெயந்திபுரவில் முன்னாள் தமிழ் தீவிரவாத அமைப்பு ஒன்றின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

அஜித், பம்பெக் [வயது 23] என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார். இரவு 7. 30 மணியளவில் வீட்டுக்கு வந்த இனந் தெரியாத நபர்கள் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர்.

தலை மற்றும் நெஞ்சிலும் சூட்டுக் காயங்கள் காணப்படுகிறது, இரு மாதங்களுக்கு முன்னர் இவர் வேறு ஓர் தமிழ் அமைப்பிலிருந்து விலகியிருந்தார் என பொலிஸ்வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பு வைத்தியசாலையில் இவரது சடலம் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. [க-60]

## சப்புகஸ்கந்தை எரிபொருள் களஞ்சியசாலை விஸ்தரிப்பு

[கொழும்பு]

சப்புகஸ்கந்தையில் புதிய விநியோக வசதிகள்கொண்ட எரிபொருள் களஞ்சியசாலை 65 கோடி செலவில் விஸ்தரிக்கப்பட்டு வருகிறது.

இக் களஞ்சியசாலையில், 30 ஆயிரம் மெற்றிக்தொன் வரையில் எரிபொருள் சேர்த்து வைக்கக் கூடியதான ஒவ்வொன்றும் 5 ஆயிரம் மெற்றிக்தொன் கொள்ளளவு கொண்ட 6 எண்ணெய்க் குதங்கள் அமைக்கப்பட்டு வருகிறது.

இவற்றின் நிர்மாணப் பணிகள் இவ்வருடத்திற்குள் முடிவடைந்து விடும் எனத் தெரிய வருகிறது.

(க-9)

1979ஆம் ஆண்டில்நியமனம்பெற்றும்

## தமது பதவிகளை உறுதிப்படுத்தாத ஆசிரியர்கள் விபரம் கோரப்படுகிறது

[கொழும்பு]

1979 ஆம் ஆண்டிற்கு முன் ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டு தமது பதவிகளை உறுதிப்படுத்தாத ஆசிரியர்கள் தத்தமது கல்வி வலயங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

1979 ஆம் ஆண்டிற்கு நியமனம் வழங்கப் பெற்றவர்களில் பலருக்கு இன்றும் உறுதிப்படுத்திய நியமனக் கடிதங்கள் கிடைக்கவில்லை என்பது தெரியவருகிறது. இவர்கள் வலயக் கல்விப் பணிப்பாளருக்கும் அமைச்சுக்கும் விபரங்களை அனுப்பும்படி கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

(த-து)

இராமிய தோட்டத் தொழிலாளர்

## காங்கிரஸ் ச்பொது செயலரின் இறுதிக் கிரியைகள் இன்று

[கொழும்பு]

காலஞ் சென்ற இராமிய தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் செயலாளர் வி. எஸ். இராஜனின் இறுதிக் கிரியைகள் இன்று நடைபெறும்எனத்தெரியவருகிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை தனது 65-வது வயதில் மாரடைப்பால் மரணமான வி. எஸ். இராஜன் இலங்கைத் தோட்டத் தொழிலாளர் யூனியன் பொதுச் செயலாளராகவும் சமசமாஜக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களில் ஒருவராகவும் விளங்கியவர்.

இதே சமயம் இவர் ஒரு சிறந்த தொழிற்சங்கவாதி என்பதும் குறிப்பிடத்தக்கது.

(க-9)

## நெடுந்தீவில் கல்லுடைக்கும் ஆலைதிறப்பு

(நெடுந்தீவு)

நெடுந்தீவு ப. நோ. கூ. சங்கம் எதிர்வரும் 15ம் திகதி, புதிதாக நிர்மாணித்துள்ள கல் உடைக்கும் ஆலையை வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கவுள்ளது.

யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செ. கு. சண்முகநாதன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு இவ்ஆலையைத் திறந்து வைப்பார் என சங்கத் தலைவர் நா. சங்கரப் பிள்ளை ஜே. பி. அவர்கள் தெரிவித்தார்.

(க-82)

## உள்ளூர் கலைப் போட்டிகள்

[அரியாலை]

அரியாலை 81 வது சுதேசியதிருநாட் கொண்டாட்ட விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்டுவரும் உள்ளூர் ரீதியான கலைப் போட்டிகளில் சில நாளையும் நாளை மறுதினமும் இடம்பெறவுள்ளது.

நாட்டுப்பாடல் போட்டி சனிக்கிழமையும், சங்கீத வாய்பாட்டுப்போட்டிஞாயிற்றுக்கிழமை பி.ப. 3. 00 மணிக்கும் மேற்படி சனசமூக நிலையத்தில் இடம் பெறவுள்ளது.

(க-36)

## உடையமைத்தல் பயிற்சி

(அரியாலை)

இணுவில் இந்துக் கல்லூரியில் முறைசாராக் கல்விப் பிரிவின் கீழ் உடையமைத்தல் பயிற்சி நெறி ஆரம்பிக்கப்படவுள்ளது. (க)

## இன்றைய சிந்தனை

தூய்மையற்றவர்களாக எண்ணினால் தூய்மையற்றவர் ஆவீர்கள், தூய்மையானவர்களாக எண்ணினால் தூயவர்கள் ஆவீர்கள்.



## தவக்கால சிந்தனை

### 3 ஆம் நாள்

உன் நண்பனுக்காக உயிரைக் கொடுப்பதை விட மேலான அன்பு எதுவுமில்லை.

அன்புபுனிதமானது, இனிமையானது, தூய்மையானது. அன்பு பற்றி புனித சின்னப்பர் தமது திருமுகங்களில் மிக அழகாகச் சொல்லியுள்ளார். உளவியலாளர்கள் அன்பு பற்றிப் பல்வேறு வரைவிலக்கணங்களைக் குறிப்பிடுகின்றனர். மனித சமூகத்தில் அன்பு பல்வேறு வாழ்நிலைகளில் பல வடிவங்களை எடுக்கிறது.

இயேசு அன்பின் ஊற்று தன்னை அன்பு செய்தவர்களை மட்டுமன்றி பகைவர்களையும் அன்பு செய்தார். தம் போதனைகளுடன் மட்டும் அவர் நின்றுவிடவில்லை தம் போதனைகளைச் சாதனைகளாக்குகின்றார். தம் உயிரையே கொடுக்குமளவிற்கு அவரது அன்பு தன்னலமற்றதாய் இருந்தது. நாமும் சிந்திப்போம்.

இன்று அன்புக்காக அரவணைப்புக்காக ஏங்கும் உள்ளங்கள் எத்தனை? வயோதிபத்தின் தளர்ச்சியினாலும் நோயின் கொடுமையினாலும் உறவுகளின் உருக்குலைவினாலும் குடும்பங்களின் சிதைவுகளினாலும் முழுமையான அன்பைச் சுவைக்காது வாழ்க்கையில் வெறுமையும் விரக்தியும் கொண்டு வாழும் இளம் உள்ளங்கள் எத்தனை? இவர்கள் மட்டில் எனது கடமை என்ன? இவர்களை நான் எவ்வாறு நோக்குகிறேன். அவர்களது உணர்வுகளை நான் எவ்வாறு புரிந்து கொள்கிறேன். எமக்கு தரப்பட்டிருக்கும் தவக்காலத் தியானமானது பிறரது துன்பங்களில் பங்கு கொண்டு உண்மையான அன்பைக் கொடுப்பவர்களாக வாழ முயற்சிப்போம்.

யோ. மாலினி
திருநெல்வேலி.

# வடகிழக்கு மாகாண ஆளுநர் தமிழ் ஆசிரியர் சங்கம் இன்று சந்திப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தனாவை தமிழர் ஆசிரியர் சங்க உறுப்பினர்கள் இன்று சந்திக்கவுள்ளனர்.

வடக்கு-கிழக்கு அதிபர்கள், ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அவர்களின் கொடுப்பனவுகள் தொடர்பாகவே கலந்துரையாடப்படுமென தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலர் தெரிவித்தார்.

ஆளுநரின் கொழும்புஅலுவலகத்தில் நடைபெறும்இச் சந்திப்பில் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சார்பில் அதன் தலைவர் ந. குமரகுருதாஸன் பொதுச் செயலர் த. மகாசிவம், நிர்வாகச் செயலர் சி. சரவணபவானந்தன் ஆகியோர் கொண்ட குழுவே ஆளுநரைச் சந்திக்கவுள்ளனர். (ச)

## விடுதலை.

னான சண்முகலிங்கம் அர்ஜுனை விடுதலை செய்யக் கோரியே இப் பகிஷ்கரிப்புப் போராட்டம்இடம் பெற்றுள்ளது.

தமது சக மாணவனை விடுதலை செய்யாவிடின் தமது பகிஷ்கரிப்புப் போராட்டம் தொடரும் என்றும் மாணவர்கள் அறிவித்துள்ளனர்.

பெரிய முற்றவெளி மைதானத்தின் முன்வந்து அமைதியாக அமர்ந்திருந்து தமது போராட்டத்தை மாணவர்கள் நடத்தினர்.

இதனையடுத்து ஸ்தலத்திற்கு வந்த திருமலை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மாணவன்அர்ஜுனை விசாரணைசெய்து குற்றமில்லையாயின் ஒரு கிழமைக்குள் விடுதலை செய்வதாயும் குற்றமிருப்பின் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்துவதாகவும் உறுதியளித்ததுடன் அதுவரை இரு மாணவர்கள் அம்மாணவனை ஒவ்வொரு நாளும் சென்று பார்க்க அனுமதிப்பதாகவும் உறுதியளித்ததை அடுத்து மாணவர்களின் பகிஷ்கரிப்புப் போராட்டம் கைவிடப்பட்டது.

இதேவேளை பகிஷ்கரிப்புப் போராட்டம் இடம்பெற்ற பாடசாலை அதிபர்களையும் அழைத்து பொலிஸ் அத்தியட்சகர் பேச்சு நடத்தியதாகத் தெரியவருகிறது. (ச)

## ஜனாதிபதி---

விருந்து இராணுவம் வெளியேறி இருந்தது.

ஆலயத்தின் புனருத்தாரண வேலைகள் மேற்கொள்ளப்படவேண்டியுள்ளதால் மேற்குப்பக்கத்தில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் வெளியேற வேண்டும் என்றும், ஆலய பூசகர்கள் தங்கி இருப்பதற்கு அவர்களுக்கான வீடுகள் கட்டுவதற்கு ஏற்கனவே இவ்விடம் தெரிவு செய்யப்பட்டிருந்தது. ஆலய புனருத்தாரண வேலைகள் மேற்கொள்வதற்கு பூசகர்கள் இருப்பதற்கு வீடுகள் அவசியம் கட்டவேண்டும் என்று புனருத்தாரண சபைத் தலைவர் திரு ஆர். நமசிவாயம் தெரிவித்தார். (வ)

ஸ்ரீ செல்வா
யாழ். ஸ்ரான்லி வீதி,
காலை 10-30 பி.ப 2.30
சரத்குமார் ஹீரோ
நடித்த
முன்னறிவித்தல்
(00115)

## கணக்காளருக்கு பிரியாவிடை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபையில் கடந்த பத்துவருடங்களாக பிரதம கணக்காளராகக் கடமையாற்றி, யாழ்ப்பாணம் பிரதிமாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்திற்கு மாற்றம் பெற்றுச் செல்லும் க. தனரஞ்சிதராஜனுக்கு மாநகரசபை உத்தியோகத்தர்களும், ஊழியர்களும் இணைந்து நடத்தும் பிரியாவிடை வைபவம் இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ். மாநகர ஆணையாளர் வே. பொ, பாலசிங்கம் தலைமையில் நடைபெறும்.

நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறும்இந்நிகழ்வில் பிரதம கணக்காளராகக் கடமையேற்கும் எஸ். சண்முக ரெட்ணத்திற்கு வரவேற்பும் இடம் பெறும். (ந)

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப. 1.30மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளன,

வித்தியாலய அதிபர்செல்வி பா. மார்க்கண்டு தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச செயலகதிட்டமிடல் உதவிப்பணிப்பாளர் சிவஸ்ரீ .சி. இரவீந்திரசர்மா அவர்களும்சிறப்பு விருந்தினராக செல்லப்பா நடராசா ச.யோகராசா (முன்னாள் கிராமசேவகர்) ஆகியோர் கலந்து கொள்வர்,

## வெல்லாவெளி---

இதை அடுத்துப் படையினர் மேற்கொண்ட தேடுதலில் 4 சடலங்களும் 4 கைக்குண்டுகளும் சயனைட் வில்லை ஒன்றும் இரண்டு சைக்கிள்களும் 1600 ரூபாய் பணமும் மற்றும் ரசீதுப் புத்தகம் ஒன்றும் மீட்கப்பட்டதாகவும் பாதுகாப்புத் தரப்பு மேலும் தெரிவித்துள்ளது.

மரணமானவர்கள் புலிகளின் நிதிப்பிரிவைச் சேர்ந்தவர்கள் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-108)

## கைது..

34) ஆகிய இருவருமே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டவர்களாவர்.

கொழும்பு குண்டுவெடிப் பொன்றில்மரணமான பெண் ஒருவரின் தலை சம்பந்தமாக இவர்கள் விசாரிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குண்டு வெடிப்பில் மரணமான பெண்ணின் பெயருக்கும் இராசம்மாவின் மகளின் பெயருக்கும் இடையில் ஒற்றுமை இருந்ததாலேயே இவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் விசாரணையின் போது இவர்களின் மகள் சில மாதங்களிற்கு முன் புற்றுநோயால் இறந்தமை தெரிய வந்ததை அடுத்தே இவர்கள் விடுதலை செய்யப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (வ-ச)

### இராணுவக்கட்டுப் பாடற்ற

# முல்லை மாவட்ட அபிவிருத்திக்கு 37 லட்சரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது!

இராணுவக்கட்டுப்பாடற்ற முல்லைத்தீவு மாவட்டத்தின் அபிவிருத்தி பணிகளுக்கென இவ்வாண்டு 37லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதில் கரைத்துறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவுக்கு 7லட்சம்ரூபாவழங்கப்பட்டுள்ளது,

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்கு10லட்சத்து 35ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், இதில் மாவட்டகடல் தொழில் விரிவாக்க அலுவலகக் கட்டட நிர்மாணத்திற்காக 3இலட்சத்து 85 ஆயிரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒட்டுசுட்டான் பிரதேசசெயலகப் பிரிவிற்கு 5இலட்சத்து 50ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் நான்கு லட்சத்து 50ஆயிரம் ரூபா முத்தையன் கட்டு குளத்தை புனருத்தாரணம்செய்வதற்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

துணுக்காய்பிரதேச செயலர் பிரிவிற்கு5லட்சத்து35ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது, இதில் 2இலட்சம் ரூபா ஐயன் குளம் புனரமைப்பிற்கும் 3இலட்சத்து 35 ஆயிரம் ரூபா மல்லாவி வைத்திய சாலை புனரமைப்பிற்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.

மற்றும் மாந்தை கிழக்கு பிரதேச செயலகப் பிரிவில் வவுனிக்குளம் மல்லாவி பிரதான வீதித்திருத்தத்திற்கு 4லட்சத்து 25ஆயிரம் ரூபாவும் கரும்புள்ளியன் குளக்கட்டு பலப்படுத்தலுக்கு 3இலட்சத்து 35 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [வ-ச]

## இலங்கை வெற்றி

பாகிஸ்தான் பொஸாவரில் இலங்கை அணிக்கும் பாகிஸ்தான் அணிக்கும் இடையில் நடைபெற்ற இரண்டாவது கிரிக்கெட் ரெஸ்ட் போட்டியில் இலங்கை அணி 57 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

8விக்கெட் இழப்புக்கு 222 ஓட்டங்களுடன் நேற்று களமிறங்கிய பாகிஸ்தான் அணி 316 ஓட்டங்கள் மட்டும் பெற்று சகல விக்கெட்டுகளையும் இழந்து தோல்வியைத் தழுவிக்கொண்டது.

முத்தையா முரளிதரன் 141 ஓட்டங்களுக்கு 10 விக்கட்டுக்களைக் கைப்பற்றினார்.

உலகக்கிண்ணத் தோல்விக்குப்பின் இலங்கை அணி அடுத்தடுத்து வென்ற மூன்று ரெஸ்ட் போட்டித் தொடர் இதுவாகும்.

இப்போட்டியின் சிறந்த ஆட்டவீரராக முத்தையா முரளிதரன் தெரிவுசெய்யப்பட்டார். (வ-ச)

## ஜனாதிபதி சந்திரிகா--

இரண்டு மூன்று தடவைகள் இவை தொடர்பாக சந்திப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

சுமுகமான முறையில்நடைபெற்ற இப்பேச்சுவார்த்தையின் போது,

எம்மால் 1997ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட நகல் சீர்திருத்தச்சட்ட யோசனைகளுக்கு சொல்லப்பட்ட பரிந்துரைகளை அடக்கிய ஆவணங்களே ஐக்கியதேசியக் கட்சியுடனான பேச்சில் கலந்துரையாடப்பட்டதுடன் உடன்பாடு காணும் எதிர்பார்ப்பாகவும் அமைந்தது. இவ்வாறு நேற்று ஐக்கிய தேசியக் கட்சியுடன் நடத்திய பேச்சுக்குறித்து ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இதுபற்றி கருத்துத் தெரிவிக்கையில் வடக்குக் கிழக்கு யுத்தத்தை நிறுத்துவது எவ்வாறு என்பது தொடர்பாக பொதுவான ஒரு இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும் என்பது பற்றியே பேச்சு அமைந்தது. அந்த வகையில் இப்பேச்சுவார்த்தை மிகமுக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும் எந்தவொரு திட்டமோ அல்லது பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்படும் சட்டத்தையோ மாற்றக்கூடாது. பொதுவான விடயங்களில் இண[illegible]ப்பாட்டை ஏற்படுத்தும் வகையிலேயே அரசதரப்பு செயற்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்,

இந்த நடைமுறைகள் ஐக்கிய இராட்சியத்திலும் ஏனைய நாடுகளிலும் பரீசித்துப் பார்க்கப்பட்டுள்ளன என்றும் இவ்வாறான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண பேச்சுவார்த்தைகளை நடத்தும்போது எவ்வாறான தடைகள் வந்தாலும் தொடர்ந்து பேச்சுவார்த்தையை முன்னெடுக்க வேண்டும் என தாம் உணர்வதாகவும் அவர் கூறினார்.

பேச்சின்போது ஏற்படும் பிரச்சினைகள் பேச்சின் மூலமே தீர்க்கப்பட வேண்டுமென்பதை ஆரம்பத்திலேயே உணரவேண்டும் என்றும் அவர் சொன்னார்.

தாம் முன்வைத்த அதிகாரப்பகிர்வு யோசனைகள் பற்றி பேச்சின்போது பொது இணக்கப்பாடு ஏற்படுமானால் அது நாட்டின் ஜனநாயக நடை முறையைபலப்படுத்துவதாக அமையும் என்றும் அவர் மேலும் கூறினார்.

## பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டோர்

நேற்றைய சந்திப்பில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் சார்பில் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கவுடன் பொதுசன ஐக்கிய முன்னணியின் செயலாளர் டி. எம், ஜயரத்தின சுதந்திர கட்சியின் செயலாளர் தர்மசிறிசேனநாயக்கா, லங்கா சமசமாஜக் கட்சியின்சார்பில் பட்டி வீரக்கோன், இந்திக குணவர்த்தனா, இரட்ண சிறி விக்கிரமநாயக்கா, ஜீ. எல். பீரிஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஐக்கியதேசியக்கட்சியின் சார்பில் கட்சித்தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில்விக்கிரமசிங்கவும், கட்சியின் தவிசாளர் கருஜெயசூரிய, கட்சியின் செயலாளர் காமினிஅத்துக்கோறளை, முன்னாள் நிதி அமைச்சர் றொனிடிமெல், கே. என். சொக்ஸி ஆகியோர் கலந்து கொண்டார்கள். [வ]

## தப்பியோடிய படையினரை கைது செய்ய நடவடிக்கை

இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களைக் கைது செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இருப்பினும் தற்போது கூட தானாக வந்து சரணடைபவர்களுக்கு தண்டனை குறைக்கப்பட்டு மீண்டும் சேவையில் இணைக்கப்படுவர் எனவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன'

இது வரை வழங்கப்பட்ட பொது மன்னிப்பின் போது 4,400 படையினர் சரணடைந்துள்ளனர் எனவும் படையினர் தொடர்பான தகவல் தெரிந்தோர் தமக்கு அறியத்தரும்படியும் பாதுகாப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன' (வ-ச)

## ஐ. தே. கட்சி எமக்கு எதிராக பாதகமான நடவடிக்கை எடுத்தால்நீதிமன்றம்செல்வோம்

### சரத் அமுனுகம தெரிவிப்பு

எம்மீது ஐக்கிய தேசியக் கட்சி மேற்கொள்ள உத்தேசித்திருக்கும் ஒழுக்காற்று விசாரணைக்கு நாம் முகங்கொடுக்கத் தயாராகவுள்ளோம். எமக்கு எதிராக பாரதூரமான பாதகமான நடவடிக்கைகளை எடுத்தால் மீண்டும் நீதிமன்றம் செல்லவும் தயாராக உள்ளோம் என்று ஐக்கிய தேசியக் கட்சி மாற்றுகுழு உறுப்பினர்சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

ஐ.தே. கட்சி செயற்குழுக் கூட்டத்தில் மாற்றுக்குழு உறுப்பினர் ஜெயலத் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ]

## ஒருதொகுதி மருத்துவ உபகரணங்கள் யாழ்ப்பாணம் எடுத்துவரப்பட்டன.

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனைக்கு உட்பட்ட வைத்தியசாலைகளுக்கான ஒரு தொகுதி மருத்துவ உபகரணங்கள் யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டுள்ளன.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க கப்பல் மூலம் எடுத்து வரப்பட்ட இவ் உபகரணத் தொகுதி 3x கதிர் இயந்திரங்களும் 25 சக்கர் இயந்திரங்களும் அடங்குகின்றன.

இவற்றில் உள்ள மூன்று x கதிர் இயந்திரங்களும் சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை, பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலை தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலை ஆகியவற்றுக்கு தலா ஒவ்வொன்றாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ-78)

## அநாவசியமற்ற..

அநாவசியமற்ற யுத்தம் நிறுத்தப்படின் பொருளாதார அபிவிருத்தி ஏற்பட்டு நாடுஒருஉன்னதமான நிலையடையும் எனவும் அமைச்சர் சொன்னார், (வ-ச)

## சமாதான..

பதாகவும் அழிவினை ஒழிப்பதற்கு எடுக்கும் நடவடிக்கைகள் சகல தடைகளையும் மீறியவகையில் முன்னெடுக்கப்படவேண்டும் என்று கூறியுள்ளது. (வ-ச)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆண்டு மார்ச் மாதம் 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.